

# இயேசுவின்

## பாதபடியில்

சாது சுந்தர் சிங்

# இயேசுவின்

## பாதபடியில்

### சாது சுந்தர் சிங்

கிறிஸ்துவின் வார்த்தை நூல் நிலையம்
சென்னை, இந்தியா.

இயேசுவின் பாதபடியில்

At the Master's Feet (Tamil) by Sadhu Sunder Singh

Copyright © 2012 by Word of Christ Ministries

Translated into Tamil by F. Olive Francis, Madurai

ISBN: 978-93-82134-69-5

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording, or otherwise without the prior written permission of the publisher.

First Edition - March 2013
First Reprint - September 2013
Second Reprint - April 2015

Published by:
WORD OF CHRIST MINISTRIES
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600 010 Tamil Nadu, India
Phone: 044 - 2661 3242 / 4264 0111
E-Mail ID: info@wordofchrist.org
Website: www.wordofchrist.org

Printed at Chennai, India.

Price: Rs 40/-

# பொருளடக்கம்


முன்னுரை / vii

அறிமுகம் / ix

1. தேவ சமூகத்தின் வெளிப்பாடு / 1

பகுதி 1

பகுதி 2

2. பாவம் மற்றும் இரட்சிப்பு / 11

பகுதி 1

பகுதி 2

3. ஜெபம் / 23

பகுதி 1

பகுதி 2

பகுதி 3

4. ஊழியம் / 37

பகுதி 1

பகுதி 2

5. சிலுவையும் பாடுகளின் இரகசியமும் / 47

பகுதி 1

பகுதி 2

6. பரலோகமும் நரகமும் / 55

பகுதி 1

பகுதி 2

ஒரு ஜெபம் / 63

# முன்னுரை

**கிறிஸ்துவின் வார்த்தைகள்:**

**"நீங்கள் என்னை ஆண்டவரென்றும் போதகரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்" (யோவா.13:13).**

**"என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத்.11:29).**

ஒப்புதலின்மைக்கும் குறை நிறை கூறப்படுவதற்கும் இலக்காகாத முழுமை பெற்ற எதுவும் இவ்வுலகில் இல்லை. நமக்கு ஒளியையும் வெப்பத்தையும் தரும் சூரியனில் புள்ளிகள் இல்லாமல் இல்லை. ஆனால் சூரியன் தனது அனுதின கடமையை செய்யாமல் விட்டுவிடுவதில்லை. நம்மிடம் ஒப்படைக்கப்பட்டதை நமது முழு திறனோடு தொடர்ந்து முயற்சித்து கனிதரும் வாழ்வை வாழ அது நமக்கு வழி காட்டுகிறது.

ஆண்டவரால் இந்த புத்தகத்திலுள்ள சத்தியங்கள் எனக்கு வெளிப்படுத்தப்பட்டபொழுது ஆழமாக அவை என்வாழ்வை தொட்டன. அவற்றை நான் ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஆசிய நாடுகளில் செய்தி கொடுக்கும்பொழுது எடுத்து பயன்படுத்தியுள்ளேன். என்னுடைய நண்பர்களின் விருப்பத்திற்கு இணங்க நான் அவற்றை எல்லாம் இந்த சிறு புத்தக வடிவாக தந்துள்ளேன். ஒரு வேளை அதில் எழுதுவதில் சில குறைகள் காணப்பட்டாலும் அதனை ஜெபத்துடனும் திறந்த மனதுடனும் படிப்பவர்களுக்கு நான் பெற்றது போன்ற பலன் கிடைக்கும் என நம்புகிறேன்.

இச்சத்தியங்களை விவரித்துச் சொல்ல எனக்கு கடினமாக இருந்திருக்கும், ஆனால் அவை உவமைகளாக வெளிப்படுத்தப்பட்டபடியினால் எனக்கு எளிதாக விளக்கி எழுத முடிந்தது.

தேவன்தாமே தமது கிருபையினாலும் இரக்கத்தினாலும் இந்த சத்தியங்களைத் தந்து என்னை ஆசீர்வதித்தார். இவற்றைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் அவை ஆசீர்வாதமாக இருக்கவேண்டும் என்பதே எனது ஜெபம்.

தங்கள் தாழ்மையுள்ள ஊழியன்

சுந்தர்சிங்.

# அறிமுகம்

## முதல் தரிசனம்

ஓர் இருண்ட இரவு நேரத்தில் ஜெபிப்பதற்காக தனியாக காட்டினுள் சென்றேன். ஒரு பாறையின்மேல் அமர்ந்து எனது எல்லா காரியங்களையும் தேவனிடம் தெரியப்படுத்தினேன். சிறிது நேரத்தில் ஒரு ஏழை மனிதன் என்னிடம் வருவதைக் கண்டு, "பசியாகவும் குளிராகவும் இருப்பதால்" "ஏதாகிலும் உதவி கேட்க வந்திருக்கக் கூடும்" என எண்ணினேன். அவனிடம் "நான் ஒரு ஏழை மனிதன் இந்த போர்வையைத் தவிர என்னிடம் ஒன்றுமில்லை. அருகிலுள்ள கிராமத்திற்கு சென்றால் ஏதாகிலும் உதவி கேட்கலாம்" எனக் கூறினேன். நான் இதைச் சொல்லும் பொழுதே மின்னலைப் போன்ற ஒளி பிரகாசிக்க ஆசீர்வாதத்தை பொழிந்து உடனே மறைந்து விட்டார். ஐயோ, ஐயோ, இப்பொழுதுதான் அவர் எனது ஆண்டவர், என அறிந்தேன். என்னிடம் எதுவும் கேட்கவரவில்லை. ஆனால் ஆசீர்வதிக்கவும் ஐசுவரியவானாக்கவும் வந்தார் (2 கொரி.8:9) என அறிந்து அழுது புலம்பினேன். என் மனதிற்கு அறியும் திறன் குறைவாக உள்ளது என வருந்தினேன்.

## இரண்டாவது தரிசனம்

இன்னொரு நாள் எனது வேலைகள் முடிந்தபிறகு அதே காட்டில் ஜெபிக்க சென்றேன். அதே இடத்தில் அமர்ந்து ஜெபித்தேன். யாரோ ஒருவர் வந்து என் அருகில் நிற்பதை உணர்ந்தேன். அவன் உடுத்தியிருந்த உடையாலும் பேச்சினாலும் அவனை தேவனுடைய உத்தம ஊழியர் என எண்ணினேன். ஆனால் அவன் கண்கள் தந்திரத்தினால் மின்னுவது போன்றிருந்தது. பேசும்பொழுது நரகத்தின் வாடை பேச்சில் தெரிந்தது.

அவன் இவ்வாறு என்னை அழைத்து பேசினான். "தூய்மையும்

கனமுமுள்ள ஐயா, தங்கள் ஜெபங்களில் நடுவே வந்து தனிமையை கலைத்ததற்காக மன்னியுங்கள். மற்றவர்களுடைய நன்மைக்காக ஒரு முக்கியமான விஷயத்தை உங்கள் முன் வைக்கிறேன். உங்களது தூய்மையான பக்தி வாழ்க்கை எனக்கும் அநேக பக்தியுள்ள மக்களுக்கும் மனதில் ஆழ பதிந்து விட்டது. தேவனுடைய நாமத்துக்காக உங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையும் பலியாக தந்திருந்தாலும் நீங்கள் இன்னும் முழுவதுமாக பாராட்டப்படவில்லை. எனது கருத்தின் ஒரு சில ஆயிரம் கிறிஸ்தவர்கள் மட்டுமே நீங்கள் கிறிஸ்தவராக இருப்பதால் உங்களை அன்புடன் ஏற்கின்றனர். அதிலும் சிலர் உங்களை நம்பவில்லை. நீங்கள் ஒரு இந்துவாகவோ முஸ்லீமாகவோ மாறினால் மிகப்பெரிய தலைவர் ஆகமுடியும். அவர்கள் இப்படிப்பட்ட ஆவிக்குரிய தலைவரை தேடுகின்றனர். என்னுடைய இந்த சிறு யோசனையை நீங்கள் ஏற்றுக்கொண்டால் 310க்கும் மேலான மில்லியன்கள் தொகையுள்ள இந்துக்களும் முகமதியர்களும் உங்களை பின்பற்றுவார்கள். பெரும் மரியாதைகள் செய்து உங்களை வழிபடுவார்கள்" எனக் கூறினான்.

உடனே எனது உதடுகளிலிருந்து இந்த வார்த்தைகள் வேகமாக வந்தன. "சாத்தானே, அப்பாலே போ, நீ ஆட்டுத் தோல் போர்த்தி வந்துள்ள ஓநாய் என்று அறிவேன்; எனது சிலுவையைவிட்டு, ஜீவனுக்கு செல்லும் இடுக்கமான பாதையைவிட்டு மரணத்திற்கு செல்லும் விசாலமான பாதையை நான் தெரிந்துகொள்ளவேண்டும் என நீ விரும்புகிறாய். என் ஆண்டவர் மாத்திரமே எனது முழுமையான பங்கானவர். எனக்காக அவர் தம் ஜீவனை அளித்தார். எனது வாழ்வையும் எனது எல்லாவற்றையும் அவருக்கு பலியாக அளிக்க அவரது தியாகம் என்னை ஏவுகின்றது. அவரே எனக்கு எல்லாவற்றிலும் எல்லாமானவர். உன்னிடத்தில் எனக்கு ஒன்றுமில்லை, போய்விடு."

இதைக்கேட்டு அவன் முறுமுறுத்து உறுமிக்கொண்டு கோபத்துடன் சென்றுவிட்டான். நான் கண்ணீருடன் எனது ஆத்துமாவை தேவனிடம் ஜெபத்தில் ஊற்றினேன், "என் ஆண்டவராகிய தேவனே, எனக்கு எல்லாம் நீர்தான், என் வாழ்வின் ஜீவன் நீர்தாம், என் ஆவியின் ஆவியானவர், கிருபையுடன் என்னை பார்த்து பரிசுத்த ஆவியானவரால் என்னை நிறைத்து என் மனதில் உமது அன்பைத்தவிர வேறெதற்கும் இடம் இல்லாதபடி செய்யும். உம்மைத்தவிர எனக்கு வேறு எதுவும் வேண்டாம். நீர் எல்லா ஈவுகளையும்

ஜீவனையும் தருபவராக இருக்கின்றீர். உலகத்தினுடைய பொருட்களை அல்ல, பரலோகத்தையும் அல்ல, உம்மையே அடைய வாஞ்சிக்கிறேன். நீர் எங்கே இருக்கிறீரோ அதுவே மோட்சம். இந்த பசியும் தாகமும் என்னிருதயத்தில் நீரே உருவாக்கினீர். நீரே அதனை திருப்தி படுத்தமுடியும். என்னை படைத்தவரே! நீர் உமக்காகவே என்னை படைத்தீர். மற்றெதற்காகவுமல்ல. அதனால் என் இதயம் உம்மில் மட்டுமே இளைப்பாறும். இந்த ஏக்கமிகுந்த வாஞ்சையுடன் நீர் சிருஷ்டித்து வைத்துள்ளீர். இதற்கு எதிராக என் இதயத்தில் வரும் எல்லாவற்றையும் நீக்கியருளும். என் இதயத்தில் வந்து, என்றென்றும் தங்கி ஆளுகை செய்யும். ஆமென்."

இந்த ஜெபத்திற்குப்பின் நான் எழுந்து நின்றபொழுது ஒளி மயமான ரூபமுள்ள ஒருவரைக் கண்டேன். பிரகாசமான அழகுடன் அவர் நின்றார். எனது கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்தபடியால் நான் தெளிவாக காண இயலவில்லை. அவரிடத்திலிருந்து மின்னலைப்போல வல்லமையுடன் அன்பின் ஒளிக்கற்றைகள் புறப்பட்டு எனது ஆத்துமாவை நிரப்பியது. எனது ஆண்டவர் முன்பாக நிற்கிறார் என்பதை அறிந்து கொண்டேன். நான் உடகார்ந்திருந்த பாறையிலிருந்து எழுந்து அவர் பாதத்தில் விழுந்தேன். எனது இதயத்தின் அறையை தமது அன்பின் திறவுகோலால் திறந்து அதனை தம் பிரசன்னத்தினால் நிரப்பினார். எங்கு நோக்கினாலும் அவரைக் கண்டேன்.

மனிதனின் இதயமே அவரது சிம்மாசனமும் கோட்டையும் என அறிந்தேன் அங்கே அவர் பிரவேசிக்கிறார். மோட்சம் துவங்குகின்றது. இந்த சில விநாடிகளில் அவர் என் இதயத்தை நிரப்பினார். அற்புதமான வார்த்தைகளை கூறினார். நான் அநேக புத்தகங்களை எழுதினாலும் அதை விவரிக்கமுடியாது. பரலோகத்துக்குரியவைகளை பரலோக மொழியில் மட்டுமே விவரிக்க இயலும். பூமியின் மொழிகள் போதாது. அப்படியும் நான் சில பரலோக செய்திகள் தரிசனத்தால் என் ஆண்டவரிடமிருந்து பெற்றதை பகிர்ந்துகொள்கிறேன். முன்பு நான் இருந்த பாறையில் அவர் அமர்ந்து கொண்டார். அவரது பாதபடியில் நான் இருந்தேன். ஆண்டவருக்கும் சீடனுக்கும் இடையே நடந்த உரையாடல் இங்கே தொடருகிறது.

# 1

# தேவ சமூகத்தின் வெளிப்படுத்தல்

## பகுதி 1

**சீடன்:** ஆண்டவரே, ஜீவனின் ஊற்றானவரே, உம்மை விரும்பி போற்றுபவர்களுக்கு ஏன் உம்மை மறைத்துக் கொள்கின்றீர்? உம்மைக் காண ஏங்கும் கண்களை ஏன் மகிழச் செய்யாமல் இருக்கின்றீர்?

**ஆண்டவர்:** எனது உண்மைபிள்ளையே, உண்மையான மகிழ்ச்சி கண்ணில் காண்பதை சார்ந்திருப்பதில்லை. அது ஆவிக்குரிய கண்களால் பார்ப்பதால் வருகின்றது. அது இதயத்தை சார்ந்திருக்கிறது. பாலஸ்தீனாவில் ஆயிரக்கணக்கானவர்கள் என்னைக் கண்டார்கள். ஆனால் அவர்கள் யாவரும் உண்மை மகிழ்ச்சியை அடையவில்லை. அழியக்கூடிய கண்களால் அழியும் பொருட்களை மட்டுமே காண முடியும். மாம்ச கண்களால் சாவாமையுள்ள தேவனையும் ஆவிக்குரியவற்றையும் காண இயலாது. எடுத்துக்காட்டாக உனது ஆவியை உன்னால் பார்க்க முடியாது. அப்படியானால் அதன் சிருஷ்டிகரை நீ எவ்வாறு காண இயலும்? ஆனால் உன்னுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படும்பொழுது நீ ஆவியாயிருக்கிற அவரை தரிசிக்க முடியும் (யோவா.4:24). இப்பொழுது நீ என்னை காண்பது மாம்ச கண்களினாலல்ல. ஆவிக்குரிய கண்களினால் காண்கிறாய். பாலஸ்தீனாவில் என்னைக் கண்ட ஆயிரக்கணக்கான மக்களின் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டதா? அல்ல. நான் மனித உருவாக உலகின் பாவங்களை நீக்கும் மீட்கும் பொருளை தரவும் பாவிகளை இரட்சிக்கும் பணி நிறைவேறவும் வந்தேன். (யோவா.19:30) அழியாமையுள்ளது அழிவதையும் மகிமையாக மாற்றியது. ஆவிக்குரிய கண்களை அடைந்தவர்கள் மட்டுமே உயிர்த்தெழுதலுக்கு பின்பு என்னைக் காண முடிந்தது (அப்.10:40,41).

2. இந்த உலகில் அநேகருக்கு என்னைப்பற்றி தெரியும். ஆனால் என்னை

தனிப்பட்ட முறையில் அறியார்கள். அவர்களுக்கு என்னிடம் தனிப்பட்ட உறவு இல்லை. அதனால் அவர்களுக்கு உண்மையான புரிந்து கொள்ளுதலும் என் பேரில் விசுவாசமும் இல்லை. அவர்கள் என்னை தங்கள் ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்வதில்லை.

ஒருவர் சிகப்பு, நீலம், மஞ்சள் ஆகிய நிறங்களைப்பற்றி கண்ணொளியற்று பிறந்த ஒருவரிடம் பேசினால் அவனுக்கு அவற்றின் வண்ண அழகை அறியாதவனாக இருப்பான். அவனுக்கு அந்த நிறங்களின் பெயர் மட்டுமே தெரியும். தனது கண்கள் திறக்கப்படும்வரை வண்ணங்களின் நிறம் பற்றிய உண்மையை உருவை அறிய இயலாது. அதைப்போன்றே ஒரு மனிதனின் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படும்வரை, அவன் எவ்வளவுதான் கற்றறிந்தவனாக இருந்தாலும், அவனால் என்னை அறிந்துகொள்ளவோ எனது மகிமையை காணவோ முடியாது. அவனால் நான் தேவனின் மனித அவதாரமானேன் என்பதை புரிந்துகொள்ள முடியாது.

3. அநேக விசுவாசிகள் எனது சமூகத்தை தங்கள் இதயத்தில் உணர்ந்திருக்கின்றனர். ஆவிக்குரிய வாழ்வையும் சமாதானத்தையும் நான் அளிப்பதை அறிந்தும் சாதாரணமாக என்னை காணமுடியாமல் உள்ளனர். கண் அநேக பொருட்களை பார்க்கமுடியும். ஆனால் யாராவது கண்ணில் மருந்து விடும்பொழுது கண்ணால் அதனை பார்க்க முடியாது. ஆனால் மருந்து கண்ணில் இருப்பதையும், சுத்தமாக்குவதையும் பார்வையை குணமாக்குவதையும் அறிய இயலும்.

4. உண்மை விசுவாசிகளின் உள்ளத்தில் நான் வலம் செய்யும்பொழுது வரும் மெய் சமாதானத்தை அவர்கள் பார்க்க இயலாவிட்டாலும் அதன் வல்லமையினால் ஆனந்தம் அடைகின்றனர். இருதயத்தில் பெறும் ஆனந்தமும் மன அமைதியும் என்னால் வருகிறதை உணருகின்றனர். அது நாவையும் இனிப்பான பண்டங்களையும் போன்றது. நாவின் சுவையும் பார்க்கும் தன்மையும் இனிப்பு பண்டங்களின் இனிப்பும் கண்ணால் காண இயலாதவை. இவ்வாறே மறைவான மன்னாவினால் நான் எனது பிள்ளைகளுக்கு ஜீவனையும் ஆனந்தத்தையும் அளிப்பது இவ்வுலக அறிவினால் அறியக்கூடாதது (வெளி.2:7).

5. சில வேளைகளில் வியாதிப்படும்பொழுது நாவின் சுவையறிதல் பாதிக்கப்படுகிறது. அப்பொழுது வியாதிப்பட்டவனுக்கு எவ்வளவு சுவையான

உணவை தந்தாலும் அது அவனுக்கு சுவையின்றி காணப்படும். இவ்விதமாகவே பாவம் குறுக்கிடும்பொழுது ஆவிக்குரியவற்றின் சுவையை குறைக்கின்றது. அவ்வித சூழ்நிலைகளிலே எனது வார்த்தையும் ஊழியமும் பிரசன்னமும் விருப்பமாக இருப்பதில்லை பாவியான ஒருவன் வசனத்தால் பலனடையாமல் விவாதிக்கவும் குறைகூறவும் துவங்கி விடுகின்றான்.

**6.** மேலும் அநேக விசுவாசிகள், பிறவிக்குருடனாக இருந்து பார்வை பெற்ற மனிதனைப்போல– இயேசுவை தீர்க்கதரிசியாகவும் மனித குமாரன் என்றும் பார்க்க முடிகின்றது. அவரை கிறிஸ்து என்றும் தேவகுமாரன் என்றும் உணர முடியவில்லை (யோவா.9:17,35–37). நான் மறுபடியும் வல்லமையை அவர்களுக்கு வெளிப்படுத்தும்பொழுது அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

**7.** ஒரு தாய் ஒரு தோட்டத்தின் சில அடர்ந்துவளர்ந்த செடிகளுக்குள் தன்னை மறைத்து ஒளித்து நின்றாள். அவளது சிறிய மகன் அவளை இங்கும் அங்கும் ஓடி சென்று தேடி அழுதான். அங்குள்ள ஒரு வேலையாள் அவனிடம், "மகனே! அழாதே, அந்த மரத்தில் இருக்கும் மாங்காய்களைப் பார். இந்த தோட்டத்தில் அழகழகான மலர்களைப்பார், உனக்கு அவற்றில் கொஞ்சம் பறித்து தருகின்றேன்" என்றான். ஆனால் அந்த குழந்தை அழுதான். "இல்லை! வேண்டாம்! எனக்கு என் அம்மா வேண்டும், அவள் தரும் உணவு மாம்பழங்களைவிட இனிமையானது, அவளது அன்பு இந்த மலர்களையெல்லாம் விட இனியது, உண்மையில் இந்த தோட்டம் என் அம்மாவுடையது, என் அம்மாவுடையதெல்லாம் என்னுடையது, எனக்கு என் அம்மா மட்டும்தான் வேண்டும்" எனக் கூறியதை கேட்ட அம்மா அந்த செடிகளின் மறைவிலிருந்து ஓடி வந்து அந்த சிறு குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டாள். முத்தங்கள் கொடுத்தாள். அந்த குழந்தைக்கு அப்பொழுது அந்த தோட்டமே பரலோகம் போல காணப்பட்டது. இதைப்போலவே இந்த பெரிய தோட்டத்தைப் போன்ற உலகில் எண்ணற்ற கவர்ச்சிமிக்க அழகிய பொருட்கள் இருந்தாலும் என் பிள்ளைகள் என்னைக் கண்டடையும்பொழுது மட்டுமே உண்மையான மகிழ்ச்சியை பெறுவார்கள். நான் அவர்களுடைய இம்மானுவேல், எப்பொழுதும் அவர்களுடன் இருக்கிறேன். என்னை அவர்கள் நன்கு அறிந்து தெரிந்துகொள்ளச் செய்கிறேன் (யோவா.14:21).

**8.** கடல்பாசி தண்ணீரில் இருக்கிறது. தண்ணீர் கடல்பாசியை நிரப்புகிறது. ஆனால் தண்ணீர் கடல்பாசியல்ல, கடல்பாசியும் தண்ணீர் அல்ல. அவை எப்பொழுதும் வித்தியாசமான பொருட்களாகவே இருக்கும். அவ்வாறே பிள்ளைகள் என்னிலும் நான் அவர்களிலும் நிலைத்திருக்கிறோம். இது எல்லாம் கடவுள் என்ற கொள்கை அல்ல (எல்லாம் வணக்கத்திற்குரியது அல்ல). ஆனால் இதுவே தேவனுடைய ராஜ்யம், இவ்வுலகிலிருந்து என்னை விசுவாசிக்கும் மக்கள் இதயத்தில் உள்ளது. தண்ணீர் கடல் பாசியில் இருப்பதுபோல நான் எல்லா இடத்திலும் இருக்கிறேன், அவர்கள் நான் அல்ல (லூக்.17:21).

**9.** ஒரு நிலக்கரி துண்டை எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அதை தண்ணீரினால் கழுவினாலும் அதன் கருப்பு நிறம் நீங்காது. ஆனால் அதை நெருப்பு எரிய விடும்பொழுது உடனே கருப்பு நிறம் மறைந்துவிடுகிறது. அவ்வாறே ஒரு பாவியானவன் மனந்திரும்பி பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளும்பொழுது (அவர் பிதாவிலும் என்னிலுமிருந்து வருபவர். நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்). அவர் தரும் அக்கினி ஞானஸ்நானம் பாவத்தின் எல்லா இருளையும் நீக்குகிறது. அவன் ஒளியாக இந்த உலகிற்கு வெளிச்சம் தரக் கூடியவனாகின்றான் (மத்.3:11,14) நிலக்கரியில் எரியும் நெருப்பு போல, நான் எனது பிள்ளைகளிலும் அவர்கள் என்னிலும் இருக்கும்பொழுது அவர்கள் மூலமாக நான் உலகிற்கு என்னை வெளிப்படுத்துகின்றேன்.

## பாகம் 2

**சீடன்:** ஆண்டவரே, நீர் உம்மை சிறப்பான முறையில் வெளிப்படுத்தி இந்த உலகிற்கு காட்டினால் மனிதர்கள் கடவுள் இல்லை என சந்தேகிப்பதை விட்டுவிடுவார்கள். உமது தெய்வீக தன்மையை நம்பி எல்லோரும் நீதியின் பாதையில் பிரவேசிப்பார்கள்.

**ஆண்டவர்:** என் மகனே, மனிதனின் உள்ளான தன்மையை நான் நன்கு அறிவேன். ஒவ்வொரு மனிதனின் இதயத்தின் தேவைக்கு தக்கதாக நான் என்னை வெளிப்படுத்துவேன். மனிதனை நீதியின் பாதையில் நடத்த என்னை வெளிப்படுத்துதல்தான் மிக முக்கியமானது. மனிதன் தேவனை

அறிந்து கொள்ளும்படியாக நான் மனிதனாக வந்தேன், சில அந்நிய பயங்கரமான தேவர்கள்போல அல்ல, ஆனால் முழுமையான அன்புடனும் அவனது உருவத்திலும் வந்தேன். மனிதன் தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்டுள்ளான்.

தான் விசுவாசிப்பரையும் தன்னில் அன்பு கூருகின்றவரையும் காண மனிதனிடத்தில் இயற்கையான விருப்பம் உள்ளது. ஆனால் பிதாவானவரை காணமுடியாது. இயற்கையாக அவரை நாம் அறிந்துகொள்ள இயலாது. அவரை அறிந்து புரிந்துகொள்ள அவரது இயற்கை தன்மை வேண்டும். ஆனால் மனிதனை ஒருவர் புரிந்துகொள்ளலாம். ஆனால் தேவனை காண இயலாது. இருப்பினும், அப்படியிருந்தும் தேவன் அன்பாகவே இருக்கிறார். மனிதனுக்கும் அவர் அன்பை தந்திருக்கிறார். அந்த அன்பின் ஏக்கத்தை நிறைவாக்கிட தேவன் மனித உருவாக வெளிப்பட்டார். மனிதன் புரிந்துகொள்ளும்படியாக அப்படி செய்தார்.

இவ்வாறு அவர் மனிதனாக வந்ததினால் அவரது பிள்ளைகளும் தேவதூதரும் அவரைக் கண்டு ஆனந்தித்தனர். (கொலோ.1:15,2:9) அதனால்தான் 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' என நான் உரைத்தேன் (யோவா.14:9–10). மனிதனாக நான் வந்தபொழுது 'குமாரன்' என அழைக்கப்பட்டாலும் நான் நித்திய பிதாவாகவும் இருக்கிறேன் (ஏசா.9:6).

2) பிதாவும் நானும் பரிசுத்த ஆவியானவரும் ஒன்றாக இருக்கிறோம். சூரியனில் வெப்பமும் வெளிச்சமும் காணப்படுகின்றன. ஆனால் வெளிச்சம் வெப்பம் அல்ல. மற்றும் வெப்பமானது வெளிச்சமும் அல்ல. ஆனால் அவை ஒன்றே, அவை வெளிப்படும்பொழுது வித்தியாசமானவைகளாக உள்ளன. அதைப்போன்றே நானும் பரிசுத்த ஆவியானவரும் பிதாவினிடத்திலிருந்து உலகிற்கு வெளிச்சமாகிய ஒளியையும் வெப்பத்தையும் கொண்டு வருகின்றோம் ஆவியானவர் நெருப்பை போல விசுவாசிப்பவர்களின் இதயத்திலிருந்து எல்லா பாவத்தையும் அக்கிரமத்தையும் எரித்து சாம்பலாக்கி அவர்களை தூய்மையும் பரிசுத்தமாக்குகிறார். மெய்யான ஒளியாகிய நான் (யோவா.1:9,8:12) எல்லா இருளையும் தீய ஆசைகளையும் நீக்கி அவர்களை நீதியின் பாதையில் நடத்தி இறுதியில் அவர்களது பரம வாசஸ்தலத்தில் கொண்டு செல்வேன். ஆயினும் நாங்கள் மூவர் அல்ல. ஒரே சூரியனைப்போல் ஒன்றாய் இருக்கிறோம்.

3. தேவன் தந்த தகுதியையும் வல்லமையையும் திறனையும் மனிதன் பயன்படுத்தவேண்டும் இல்லாவிடில் அவை மெல்ல வீழ்ச்சி பெற்று மரித்துவிடும். அப்படியே விசுவாசமும் உண்மையில் ஜீவனுள்ள தேவனிடம் பற்றி உறுதியாக இருக்கவேண்டும். இல்லையென்றால் பாவமென்னும் அதிர்ச்சி ஏற்படுகையில் சந்தேகமாக மாறிவிடும். அடிக்கடி சிலர் இவ்வாறு கூறுவதை கேட்கிறோம். "என்னுடைய இந்த அல்லது அந்த சந்தேகம் அகற்றப்பட்டால் நான் விசுவாசிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறேன்" என்பது உடைந்த எலும்புடைய ஒருவன் மருத்துவரிடம் முதலில் எனது வலியை நீக்கிவிடுங்கள், பின் எலும்பை சரிப்படுத்துங்கள் என்று சொல்வது போலாகும். இது மடமையானது, வலி உடைந்த எலும்பிலிருந்து வருகின்றது. எலும்பு சரியாக பொருத்தப்பட்டால் மட்டுமே வலி நீங்கும். பாவத்தினால் தேவனுடன் மனிதனுக்கிருந்த இணைப்பு துண்டிக்கப்படுகின்றது. சந்தேகங்களும், ஆவிக்குரிய வேதனைகளும் எழும்புகின்றன. தேவனோடுள்ள ஐக்கியம் மறுபடியும் புதுப்பிக்கப்படவேண்டும். அப்பொழுது எனது தெய்வீக தன்னை பற்றியும் கடவுள் இருக்கிறாரா என்பது பற்றியும் எழும்பும் சந்தேகங்கள் தானே மறைந்துவிடும். பின்பு அந்த வேதனை இருந்த இடத்தில் உலகத்தால் தரவும் எடுத்துக்கொள்ளவும் முடியாத அற்புத சமாதானம் வரும். இதற்காகவே நான் மாம்சமாகி தேவனுக்கும் ஏழையான உடைந்த மனிதருக்கும் ஐக்கியம் உண்டாகவும் அவர்கள் அவருக்குள் பரலோகில் என்றென்றும் ஆனந்தித்து வாழச்செய்யவும் வந்தேன்.

4. தேவன் அன்பாகவே இருக்கிறார். எல்லா உயிர் வாழ் இனத்திலும் அன்பு காணப்படும்படி செய்தார். ஆனால் சிறப்பாக மனிதனை அன்பு காட்டுபவனாக படைத்தார். அதனால் வாழ்வையும் நோக்கத்தையும் அன்பையும் தந்த அன்பருக்கு அவருக்கான அன்பின் காணிக்கை செலுத்தப்பட வேண்டும். அவர் உருவாக்கின இந்த அன்பு கூரவில்லையெனில், அன்பு தனது உயர்ந்த நிலைமையிலிருந்து விழுந்து சுயநலமாக மாறிவிம். இவ்விதமாக நமக்கும் மற்ற படைப்புகளுக்கும் அழிவு உண்டாகிறது.

ஒவ்வொரு சுயநலமான மனிதனும் வியக்கத்தகும் வகையில் தன்னையே வெட்டிக்கொள்பவனாக மாறுகிறான். "உன்னிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" என கூறியுள்ளேன். எல்லா மனிதர்களும் ஒருவருக்கொருவர் பிறன்தான். ஆனால் இந்த வசனம்

குறிப்பாக எப்பொழுதும் அருகருகே வசிப்பவர்களை பற்றி கூறுகின்றது. சில நாட்கள் மட்டும் நமதருகே இருந்துவிட்டு செல்பவர்களுடன் சமாதானமாக பழகுவது எளிதானது, அவர்கள் நட்புடன் இல்லையெனினும், ஆனால் எப்பொழுதும் உங்கள் அருகே வசிப்பவருடன், பிரச்சனையாக இருப்பவருடன், தொல்லை தருபவருடன் பொறுத்துக்கொள்வதும் உங்களை நீங்கள் நேசிப்பதுபோல அவரையும் அன்புகூருவதும் கடினமான ஒன்று. ஆனால் இந்த பெரிய போராட்டத்தில் நீங்கள் வெற்றி பெற்றீர்களானால் எல்லாரையும் நேசிப்பது இயல்பாகி வரும்.

மனிதன் தன் முழு இருதயத்துடனும் மனதுடனும் ஆத்துமாவுடனும் தேவனையும் தனது பிறனையும் நேசித்தால் சந்தேகத்திற்கு இடமிராது. ஆனால் அவனுக்குள் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும், அதற்கு முடிவிராது. அவன் அன்பெனும் தீயால் உருக்கப்பட்டு உருப்பெற்று தனது பரமபிதாவின் சாயலாக்கப்படுவான். அவரே முதலில் அவனை தமது சாயலாக படைத்திருந்தார்

5. உண்மையான இருதயத்துடன் என்னைத் தேடுபவர்களுக்கு எனது வார்த்தையாகிய வேதாகம மூலமாக என்னை வெளிப்படுத்துகிறேன். மனிதனுடைய மீட்புக்காக நான் மனித சரீரத்தில் வந்தேன். ஆவியும் ஜீவனுமாயிருக்கிற எனது வார்த்தையும் மனிதர்களுடைய மொழியில் எழுதப்பட்டுள்ளது. அதிலே எழுப்புதல் பெற்ற மனிதர்களும் பங்கு பெற்றுள்ளனர். மனிதர்கள் என்னை புரிந்துகொள்ள இயலாததுபோலவே எனது வார்த்தையையும் புரிந்து கொள்ளவில்லை. அதனை புரிந்துகொள்வதற்கு எபிரேய, கிரேக்க மொழிகளை அறிவது. தேவை இல்லை. மிக முக்கிய தேவை என்னவென்றால் பரிசுத்த ஆவியானவருடன் ஐக்கியப்படுதல்தான். வேதாகமத்தை எழுதிய தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் ஆகியோருடன் பரிசுத்த ஆவியானவர் நிலைகொண்டிருந்தார். தேவனுடைய வார்த்தையின் மொழி சந்தேகமின்றி ஆவிக்குரியது. ஆவியானவரால் பிறந்தவர் மட்டுமே அதனை முழுமையாக புரிந்துகொள்ள இயலும். ஒருவேளை உலகம் அவனை குறைகூறினாலும், அவன் ஒரு சிறுவனாக இருந்தாலும் ஆவிக்குரிய மொழி அவனுக்கு நன்கு விளங்கும், ஏனெனில் அது அவனது தாய்மொழி. ஆனால் நினைவில் கொள்ளுங்கள். இந்த உலகத்தின் அறிவு மட்டும் உள்ளவர்களுக்கு அதனை புரிந்துகொள்ள இயலாது. ஏனெனில் அவர்களுக்கு பரிசுத்த

ஆவியானவரிடத்தில் பங்கு இல்லை.

6. இயற்கை என்ற புத்தகத்திற்கும் நான்தான் ஆசிரியர். நான் சுதந்திரமாக அதிலே என்னை வெளிப்படுத்தியுள்ளேன். ஆனால் இந்த புத்தகத்தை படிப்பதற்கும் ஆவிக்குரிய மனக்கண்கள் தேவை. அதனால் அவர்கள் என்னை காணக்கூடும். மற்றபடி அவர்கள் என்னை கண்டடையாமல் வழிதவறக் கூடும்.

கண்பார்வை அற்ற ஒருவர் தனது விரல் நுனிகளால் ஒரு புத்தகத்தை தொட்டு அறிவதனாலேயே அதனை படிக்க இயலுகிறது. தன் விரல்நுனிகளை கண்களைப்போல பயன்படுத்துகின்றனர். ஆனால் அவ்வாறு எல்லாவற்றின் உண்மையையும் கண்டறிய இயலாது. கடவுளைப்பற்றி ஒன்றுமே அறிந்துகொள்ள முடியாது என்பவர்களும் மதத்தின் கொள்கைகளை நம்பாதவர்களும் எப்பொழுது முழுநிறைவு உள்ள இடத்திலும் குறைகளையே காண்கின்றனர். குற்றம் கண்டுபிடிப்பவர்கள், “ஒரு வல்லமையுள்ள சிருஷ்டிகர் இந்த உலகை படைத்திருந்தால் ஏன் அதில் குறைபாடுகள் உள்ளன? கடும்புயல்கள், பூமியதிர்ச்சிகள், கிரணங்கள், வேதனை, பாடுகள் மற்றும் மரணம் ஆகியவை ஏன் சம்பவிக்கின்றன? என கேட்கின்றனர். இந்த குறைபாட்டினை சொல்வதில் மடமை எப்படிப்பட்டதென்றால் கல்வியறிவற்ற மனிதன் ஒருவன் கட்டி முடிக்கப்படாத ஒரு கட்டடத்தையும் முழுவதும் முற்றுபெறாமல் உள்ள ஒரு ஓவியத்தையும் குறை கண்டுபிடிப்பது போலாகும். அவை முழுவதுமாக முற்றுபெற்றதும் அவன் தன் அறிவீனத்தினிமித்தம் வெட்க மடைந்து, அவற்றை புகழுவான். இவ்வாறே தேவன் ஒரே நாளில் இந்த உருவினை உலகிற்கு தந்துவிடவில்லை. இன்னும் ஒரே நாளில் அது முழுமையாகி விடுவதில்லை. சர்வ சிருஷ்டியும் பூரணமாக்கப்படுவதற்கு அந்த நோக்குடன் முன்னேறி செல்கிறது. இந்த உலகின் மனிதர்கள் ஆண்டவரைப்போல எதிர்காலத்தில் உள்ளவைகளையும் கண்களால் கண்டால் ஒரு குறைபாடும் இல்லாத பூரணமான உலகம் தோன்றுவதை காணமுடியும்.” அப்பொழுது அவனும் தலைவணங்கி அவர்முன் துதி செலுத்தி “எல்லாம் மிகவும் நன்றாயிருக்கிறது” என்பான்.

7. மனிதனுடைய ஆவி கோழிக்குஞ்சு முட்டை ஓட்டிற்குள் இருப்பது போல சரீரத்திற்குள் இருக்கின்றது. அந்த கோழிகுஞ்சிடம் “இந்த ஓட்டிற்கு வெளியே அகன்ற உலகம் இருக்கிறது. அங்கே எல்லாவித பழங்களும்

மலர்களும் உள்ளன. ஆறுகளும் மலைகளும் உள்ளன அதன் தாயும் அங்கே உள்ளது. இதையெல்லாம் நீ ஒட்டிலிருந்து வெளியே வரும்பொழுது பார்க்கமுடியும்'' என்றால் அதற்கு புரிந்துகொள்ளவும் நம்பவும் முடியாது. ''உனக்கு சிறகுகளும் கண்களும் உள்ளன. நீ பார்க்கவும் பறந்து செல்லவும் முடியும்'' எனக் கூறினாலும் அது நம்ப இயலாது. அது முட்டை ஒட்டிலிருந்து வெளியே வரும்வரை நம்மால் நிரூபிக்கவும் முடியாது.

இதைப்போலவே அநேகர் வரவிருக்கும் மறுமையின் வாழ்வையும் தேவன் ஒருவர் இருக்கின்றார் என்பதையும் நம்ப முடியாமல் உள்ளனர். ஏனெனில் அவர்களால் இந்த ஒடு போன்ற மாம்ச சரீரத்திற்கு வெளியே பார்க்க முடியவில்லை. அவர்கள் எண்ணங்கள் பலவீனமான சிறகுகள் போல குறுகிய அறிவுத் திறனை உடையவை. அவர்களுடைய பலவீனமான கண்கள், தேவன் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணின நித்தியமான மாறாத ஐசுவரியங்களை கண்டுபிடிக்கும் திறன் அற்றவை (ஏசா.64:4, 65:17).

இந்த நித்திய வாழ்வை அடைந்துகொள்வதற்கு ஒரே ஒரு நிபந்தனை உண்டு. இந்த சரீரத்திலிருக்கும் பொழுதே நாம் விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளவேண்டும். கோழிக்குஞ்சு தன் தாயினிடமிருந்து அதற்கு உயிர்தரும் வெப்பத்தை பெற்றுக்கொள்கிறது. அல்லவெனில் மரணபயமும் நித்திய அழிவும் நேரிடும்.

8. மறுபடியும், அநேகர் கூறுகின்றார்கள். ''ஒரு பொருளுக்கு அல்லது ஒரு உயிர்வாழ்க்கைக்கு துவக்கம் என்று ஒன்றிருந்தால் முடிவு என்பது உண்டு'' என்று. இது உண்மையல்ல. தேவன் தமது சித்தத்தின்படி ஒன்றுமில்லாமையில் இருந்து ஒன்றை உருவாக்குபவர் அவருடைய வார்த்தையின் வல்லமையால் அதற்கு அழியாமையையும் தர வல்லவர் அல்லவா? இல்லையெனில் அவர் சர்வ வல்லவரல்ல. உலகத்தில் உயிர்கள் அழிந்து மறைந்து போவதுபோல தோன்றுகிறது. ஏனென்றால் அவை மாறி அழியும் தன்மைக்கு அடிமைபட்டுள்ளது. ஆனால் அந்த உயிர்கள் இந்த மாறி அழிவடையும் தாக்கத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு நித்தியமான மாறாத தேவனுடைய பாதுகாப்பில் கொண்டுவரப்பட்டால் மரணத்தின் பிடியிலிருந்து தப்பி நித்தியத்தை அடையமுடியும். அவர் நித்திய ஜீவனின் ஊற்றானவர்.

என்னை அவரை விசுவாசிக்கிறவர்களைக்குறித்து அவர் சொன்னது:

"நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை" (யோவா.10:28). இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும் ஓமேகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார் (வெளி.1:8).

# 2

# பாவம் மற்றும் இரட்சிப்பு

## பகுதி 1

**சீடன்:** ஆண்டவரே, தேவனுக்கு கீழ்ப்படியாமலும் அவரை தொழுது கொள்ளாமலும் வாழ்வது பாவம் என்பது தெளிவாக தெரிகிறது. அதனுடைய மரணத்துக்கேதுவான விளைவு உலகின் இன்றைய நிலையில் காணப்படுகிறது. ஆனால் உண்மையில் பாவம் என்பது என்ன என்பது தெளிவாக தெரியவில்லை. சர்வவல்லமையுள்ள தேவனின் சமூகத்தில், அவருடைய சித்தத்திற்கு எதிராக, அவருடைய சொந்த உலகத்தில் பாவம் எப்படி உருவானது?

**ஆண்டவர்:** 1. பாவம் என்பது தேவனுடைய சித்தத்தை தள்ளிவிட்டு ஒருவனது சொந்த சித்தத்தின்படி வாழ்வது, உண்மையும் நீதியுமானதை விட்டுவிட்டு தன்னுடைய சுய இச்சையை நிறைவேற்ற அதில் இன்பம் காணலாம் என கருதுவது.

ஆனால் இவ்வாறு செய்வதால் ஒருவன் உண்மை மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் அடைவதில்லை. பாவம் தனியான ஒன்றல்ல. அதனை யாரும் உருவாக்கியதாக கூறமுடியாது. அது ஒரு நிலைமை.

சிருஷ்டிகர் ஒருவரே, அவர் நல்லவர், நல்ல சிருஷ்டிகர் தீமையான ஒன்றை படைத்திருக்க இயலாது. அது அவரது சொந்த இயல்புக்கு எதிரானதாகும். வேறு யாரும் பாவத்தை உருவாக்கவில்லை. முன்பே சிருஷ்டிக்கப்பட்டிருந்ததைத்தான் சாத்தானால் கெடுக்க முடிந்தது. ஆனால் அவனுக்கு எதையும் சிருஷ்டிக்கும் வல்லமை கிடையாது. எனவே பாவம் சிருஷ்டிப்புகளின் ஒரு பகுதி அல்ல. அது தனித்து உருவானதும் அல்ல. அது உண்மையற்ற தவறுகிற அழிவுக்குரிய ஒரு நிலைமையை தருவது.

எடுத்துக்காட்டாக வெளிச்சம் என்பது உண்மையாகவே நிலைத்திருக்கும்

ஒன்று. ஆனால் இருள் அவ்வாறு நிலைத்திருக்கும் பொருள் அல்ல, வெளிச்சம் இல்லாத பொழுது ஏற்படும் நிலை. அதே போன்று பாவமும் தீமையும் தம்மில் தாமே நிலைத்திருப்பவை அல்ல. அது நன்மையை இல்லாத இடத்தில் காணப்படும் ஒன்று தீமையின் இருண்ட நிலை மிகவும் பயங்கரமானது. இதனால் அநேகர் சரியான பாதையைவிட்டு விலகிச் சென்று, சாத்தான் என்னும் பாறையில் மோதி அவர்களது வாழ்க்கைப்படகு சின்னாபின்னமாகி நரகமென்றும் இருளுக்குள் மூழ்கி அழிந்து போகிறார்கள். இதற்காகவே நான் உலகத்தின் வெளிச்சமாக மாமிசத்தில் வெளிப்பட்டேன். இதனால் என்மேல் விசுவாசம் வைப்பவர்கள் அழிந்து போகமாட்டார்கள். ஏனெனில் நான் அவர்களை இருளின் அதிகாரத்தினின்று மீட்டு, இருளின் நாமமோ அல்லது அதன் சுவடோ காணப்படாத, பரலோக பாக்கியத்திற்கு பாதுகாப்புடன் அழைத்து வருவேன் (வெளி.21:23, 22:5).

சிருஷ்டிகர்த்தாவின் பிரசன்னத்தின் முன்பாக இந்த இருள் நிறைந்த பாவம் எப்படி பிரவேசித்தது என்று நீங்கள் கேட்கலாம். சாத்தானும், மனிதனும் தங்கள் சுயவிருப்பங்களை நிறைவேற்ற, தம் சுயவிருப்பப்படி, கட்டளைக்குப் புறம்பான, தகாத வழிகளில் செயல்பட்டதால் பாவம் தோன்றியது. இப்படிப்பட்ட பாவத்திற்குள் விழாதவாறு ஏன் தேவன் படைத்திருக்கக் கூடாது என்று நீங்கள் கேட்டால், மனிதன் ஓர் இயந்திரத்தைப்போல் உருவாக்கப் பட்டிருந்தால் தன் சுய விருப்பத்தின்படி செயல்பட்டு, அதனால் கிடைக்கும் மகிழ்ச்சியை அவன் அடையமுடியாமல் போயிருக்கும் என்பதே அதற்குரிய பதில். ஆதாமும், ஏவாளும் ஓர் பாவமில்லாத நிலையில் வாழ்ந்து வந்ததால், பொய், ஏமாற்றுதல், போன்ற காரியங்களை அறியாதிருந்தார்கள். எனவே தான் அவர்கள் சாத்தானின் தந்திரத்தின் ஏமாற்று வலையில் விழுந்துவிட்டார்கள். இப்படிப்பட்ட பாவம் பிரவேசிக்காத நிலையில் பெருமை என்ற ஒன்று இருந்ததை அறியாதவனாக இருந்த நிலையில் அந்த பெருமை அவனுக்குள் பிரவேசித்தால் பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டான். ஆனாலும், இப்படிப்பட்ட பாவம் மனுக்குலத்திற்குள்ளும், சாத்தானிலும் பிரவேசித்தாலும், தேவன் தம் சர்வ வல்லமையினால் ஓர் புதிய நிலையை நமக்குக் கொடுத்து, பாவ நிலையிலிருந்து ஓர் உன்னத நிலைக்குக் கொண்டு வந்தார்.

முதலாவதாக தேவனுடைய எல்லையற்ற அன்பு, அவர் மாமிசத்தில்

வெளிப்பட்டதன் மூலமாகவும், இரட்சிப்பின் மூலமாகவும் வெளிப்பட்டது. இல்லாவிடில் பிறசூழ்நிலைகளில் அது மறைக்கப்பட்ட ஒன்றாகவே இருந்திருக்கும். இரண்டாவதாக பாவத்தின் கசப்பை ருசிபார்த்தவர்கள், மீட்கப்பட்ட பின்பு கசப்பான ஒன்றை ருசிபார்த்துவிட்டு, இனிப்பான தேனை ருசி பார்க்கும்பொழுது அனுபவிக்கும் பெரும் மகிழ்ச்சியைப்போன்று, பரலோகத்தின் சந்தோஷத்தை மிகவும் மகிழ்ச்சியுடன் அனுபவிப்பார்கள். ஏனெனில் பரலோகத்தில் அவர்கள் பாவம் செய்ய மாட்டார்கள். ஆனால் தாழ்மையுடனும், அன்புடன் கூடிய கீழ்ப்படிதலுடனும், பிதாவாகிய தேவனை சேவித்து, நித்திய நித்திய காலமாய் அவரில் நிலைத்திருப்பார்கள்.

3. சூரிய சந்திரனில் காணப்படும் புள்ளிகள், பிறைகள் போன்ற அவற்றில் காணப்படும் குறைகளைக் கண்டுபிடிப்பதில் மனிதன் தீவிரம் காட்டுகிறான். ஆனால் பாவத்தில் காணப்படும், கறைகளையும், பிழைகளையும் ஒரு சிறிதும் கண்டுகொள்ள மாட்டான். அதனால் அவனிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும் என்று அறிந்து கொள்கிறோம். ஓர் குஷ்டரோகியின் உடல் அவன் வியாதியின் காரணமாக மரத்துப்போய், உணர்ச்சியற்றதாகக் காணப்படுவதுபோல, பாவத்தின் விளைவாக மனிதனின் இருதயமும், மனதும் மழுங்கிப்போய், உணர்வற்றதாகக் காணப்படுவதால், தன் பாவத்திற்காக அவன் வருத்தப்படுவதோ அல்லது வேதனைப்படுவதோ இல்லை. ஆனால் அவர்கள் பயங்கரமான அழிவைச் சந்திக்கும் சமயத்தில், அங்கே அழுகையும், பற்கடிப்பும் நேரிடும்.

4. நீரில் மூழ்குபவனின் தலைக்குமேல் டன் கணக்கில் எடையுள்ள தண்ணீர் இருந்தாலும், அவன் மூச்சுத் திணறி இறக்கும் வரைக்கும், அதன் எடையை அறியாததுபோல, பாவத்தில் மூழ்கிக்கிடக்கும் அநேகர் அந்த பாவத்தின் சுமையை உணரமாட்டார்கள். ஆனால் நீரில் இருந்து வெளியே வந்து, உதவியை நாடுகிறவன், நீரின் பாரத்தை உணருகிறான். அதேபோன்று பாவத்தின் பாரத்தை உணருகிறவன், மனந்திரும்பி என்னிடத்தில் வருகிறவன், இலவசமாக, மெய்யான இளைப்பாறுதலைக் கண்டடைவான். இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே நான் வந்திருக்கிறேன் என்று மனுஷகுமாரன் கூறுகிறார் (மத்.11:28; லூக்.19:10).

5. மரணம் நேரிடுவதற்கு முன்னர் சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் செயலிழந்து, பலவீனமாகக் காணப்படத் தேவையில்லை. உடலின் இதர

அவயங்கள் எவ்வளவு திடகாத்திரமாக இருந்தாலும் இருதயத்திலோ அல்லது மூளையிலோ ஓர் பாதிப்பு ஏற்பட்டால் மாத்திரம் போதும், வாழ்க்கை முடிந்து போகும். அதேபோன்று ஒரு சிறு பாவத்தின் நச்சுத் தன்மையின் விளைவாக மனதும், இருதயமும் பாதிக்கப்பட்டால் போதும் அது ஒருவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையை மாத்திரம் அல்ல, முழுக்குடும்பத்தையோ, அல்லது நாட்டையோ ஏன்? அது ஒரு இனத்தையோ பாதித்துவிடும். ஆதாமின் பாவம் இத்தகையத் தன்மையுடையதாயிருந்தது. என்னிலிருந்து வெளிப்பட்ட ஓர் வார்த்தை, லாசருவைக் கல்லறையிலிருந்து உயிரோடு எழுப்பியிருந்தால், முழு மனுக்குலத்திற்கும் நித்திய ஜீவனைக் கொடுக்க அது வல்லது.

மிருகங்களோ அல்லது பறவைகளோ நீண்ட நாட்கள் மனிதனோடு தங்கியிருந்து விட்டு மீண்டும் தன் இனத்துடன் சேர்ந்து கொள்ளச் சென்றால், அவற்றை அன்புடன் வரவேற்பதற்குப் பதிலாக அவற்றை, அவை இறக்கும்வரைத் தாக்குகின்றன. ஏனெனில் அவை நீண்ட காலம் மனிதனுடன் தங்கி பழகிவிட்டதால் அவற்றின் இயற்கையான பழக்க வழக்கங்களின்றும் முற்றிலும் மாறுபட்டு காணப்படுவதே இதற்குள் காரணமாகும். இவ்வாறு தன் இனத்தைச் சேர்ந்தலை மனிதனுடன் பழகியாதால், அவற்றில் ஏற்பட்ட மாறுதல்களால், அவற்றை தம் சமுதாயத்தில் சேர்த்துக் கொள்ளாமல் இருக்கும்பொழுது, தும்மார்க்கரோடு மிகவும் நெருக்கமான தொடர்புகொண்டுள்ள பாவிகளை, பரலோகத்தில் உள்ள பரிசுத்தவான்களும், தூதர்களும் எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள்? இதனால், பரிசுத்தவான்களுக்கும், தூதர்களுக்கும் பாவிகளின் மீது அன்பு இல்லை என்பது அர்த்தம் அல்ல. ஆனால் பரலோகத்தில் மிகவும் பரிசுத்தமான சூழ்நிலையே அப்படிப்பட்டவர்களுக்கு ஓர்வித வெறுப்பை உண்டாக்கும். இவ்வுலகத்தில் வாழும் பொழுதே, பாவிகள் பரிசுத்தவான்களோடு உறவுகொள்ள விரும்பாத நிலையில், நிரந்தரமாக நித்தியத்தில் பரிசுத்தவான்களுடன் சந்தோஷமாக எவ்வாறு வாழமுடியும். இப்படிப்பட்ட பரலோக சூழ்நிலை, பாவிகளுக்கு நரகத்தைப்போல அறுவறுக்கத்தக்க தாகவே காணப்படும்.

தேவனோ, தேவ ஜனமோ, பாவிகளை பரலோகத்திலிருந்த வெளியேற்றி, அவர்களை நரகத்தில் தள்ளிவிடுகிறார்கள் என்று என்னிவிடவேண்டாம். ஏனெனில் தேவன் அன்புள்ளவர். ஒருவரையும் ஒருபோதும் நரகத்தில்

தள்ளுபவர் அல்ல, அவர் ஒருபோதும் அப்படிச் செய்யவேமாட்டார். பாவியினுடைய நாற்றமெடுத்த வாழ்க்கையே அவனை நரகத்தில் தள்ளுகிறது. ஒவ்வொரு மனிதனின் இருதயத்தில் குடிகொண்டிருக்கும்; நல்ல, அல்லது தீய பண்புகளுக்கு ஏற்றவாறு, அவர்கள் வாழ்நாட்கள் முடிவுக்கு வருவதற்கு முன்பே பரலோகமோ, அல்லது நரகமோ அவர்களை நெருங்கிச் சேர்கிறது. எனவே இந்த நித்திய ஆக்கினைக்கு தப்பிக்கொள்ள வாஞ்சையுள்ள யாராயிருந்தாலும், அவன் தன் பாவத்தை உண்மையாக அறிக்கையிட்டு தன் இருதயத்தை எனக்கு (இயேசுவும்) ஒப்புவிக்கக் கடவன்; அப்பொழுது என்னுடைய பிரசன்னத்தினாலும், பரிசுத்த ஆவியின் தூண்டுதலினாலும், அவன் நித்திய காலமாய் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பிள்ளையாக மாறமுடியும்.

இவ்வுலகில் ஓர் அரசனுக்கோ அல்லது அரசாங்கத்திற் எதிராகவோ புரட்சி செய்பவன், மற்றொரு நாட்டிற்கு தப்பித்து ஓடி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும். ஆனால் தேவனுக்கு எதிர்த்து நிற்பவன் எங்கு ஓடிச் சென்று தன்னைக் காத்துக்கொள்வான்? அவன் எங்கு சென்றாலும்; பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்குக் கூடச் சென்றாலும், தேவன் அங்கு நித்தியமாய் இருப்பதை உணருவான் (சங்.139:7,8). பாவ அறிக்கைசெய்து தேவனிடத்தில் தன்னை அர்ப்பணிக்கும்பொழுது மாத்திரம் பாதுகாப்பைப் பெறமுடியும்.

ஆதாமுக்கும், ஏவாளுக்கும், தங்களை மூடி மறைத்துக்கொள்ள அத்தி இலைகள் போதுமானவைகளாகக் காணப்படவில்லை. அதனால் தேவன் அவர் களுக்குத் தோல் உடைகளைக் கொடுத்தார். அதுபோலவே, வரும் கோபத்திற்குத் தன்னைத் தப்பித்துக்கொள்ள மனிதனுடைய நன்மையான கிரியைகள் அந்த அத்தி இலைகளைப் போன்று பயனற்றவை. என்னுடைய (தேவனுடைய) நீதியின் வஸ்திரத்தைத் தவிர வேறொன்றும் காப்பாற்ற முடியாது.

9. அக்கினி சுவாலையின் எரிக்கும் தன்மையையும், அழிக்கும் தன்மையையும் அற்றுப்பூச்சி நினைப்பது இல்லை. அதனுடைய பிரகாசத்தினால் அது ஈர்க்கப் பட்டு, அதற்கள் வேகமாய் ஓடிச் சென்று அழிந்துபோகிறது. அதேபோன்று மனிதனும் பாவத்தின் நச்சுத் தன்மையையும், அழிக்கும் தன்மையையும் உணராதவனாக, அதன் கவர்ச்சியினால் ஈர்க்கப்பட்டு, நித்திய அழிவுக்கு நேராய்

விரைந்தோடுகிறான். ஆனால் நான் என் (தேவன்) ஒளியினால், மரணத்தினின்று பாவியை மீட்டெடுத்து, ஜீவனையும், நித்திய மகிழ்ச்சியையும் அவனுக்கு அளிக்கிறேன். என்னுடைய ஒளியினால் கிடைக்கக்கூடிய விலையேறப்பெற்ற ஈவுகளை தான் சுதந்தரித்துக்கொள்ளும்வகையில் அவன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான்.

10. பாவம் என்பது ஓர் மாயமான தோற்றமோ அல்லது ஓர் கற்பனையோ அல்ல. ஆனால் அது மனிதனின் தீய எண்ணங்களின் செயல்பாட்டால் ஏற்பட்ட ஆவிக்குரிய இருளின் நிலை. பெரிய அம்மை என்னும் நோய் குறுகிய காலத்தில், நிரந்தரமாக ஓர் மனிதனின் அழகிய தோற்றத்தைக் கெடுத்து ஓர் அறுவறுக்கத்தக்க தோற்றத்தை ஓர் மனிதனுக்கு ஏற்படுத்துவதுபோல, பாவமாகிய தீய வித்து அவனுக்குள் நிலைகொண்டிருந்து அவனுடைய ஆவியை சின்னாபின்னப்படுத்தி, இறுதியில் அவன் ஆவியை அழித்துப் போடுகிறது. தேவன் தீமையை சிருஷ்டிக்காததுபோல வியாதியையும், சரீர வேதனைகளையும் உருவாக்கவில்லை. மனிதனின் கீழ்ப்படியாமையினாலேயே தோன்றியது. வேதனையும், வியாதியும் கற்பனையின் விளைவுகளல்ல. மூடி மறைக்கப்பட்டுள்ள பாவங்களின், வெளிப்படையாகக் காணப்படும் விளைவுகளே ஆகும். அது ஒருவரின் தனிப்பட்ட பாவமாகவோ, அல்லது அவர் அங்கத்தினனாக உள்ள ஓர் குடும்பத்தின் பாவமாகவோ இருக்கலாம். அந்தக் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, என்னுடன் இணைத்து கொள்வார்களானால் என்னுடை சுகமளிக்கும் இரத்தம் அவர்களுக்குள் பாய்ந்து, மறைந்து கிடக்கும், வெளி )வராத பாவ ரோகங்களை குணமாக்கும். அவர்களுக்கு நித்தியத்திற்கான ஆரோக்கியத்தைத் தருவேன். அப்படிப்பட்ட ஆரோக்கியமான நிலைமையில் மனிதனை உருவாக்கி, அவன் தன் தேவனும் ஆண்டவருமானவருடன் நித்திய காலமாய் மகிழ்ச்சியுடன் வாசம் செய்யச் செய்வேன்.

## பகுதி 2

**சீடன்:**

சீடன் (குரு) எஜமான், இக்காலத்தில் சில அறிவாளிகளும் அவர்களைப் பின்பற்றுபவர்களும், இயேசுவின் இரத்தத்தினால் பெற்ற

பாவநிவாரணமாகிய அபிஷேகத்தையும், இரட்சிப்பையும், அர்த்தமற்றதாகவும், பயனற்றதாகவும் கருதுகிறார்கள். கிறிஸ்து ஓர் சிறந்த ஆசிரியர் (போதகர்) என்றும், ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஓர் சிறந்த முன்மாதிரியானவர் என்றும், கூறுகிறார்கள். நம்முடைய சுயமுயற்சிகளும், நற்கிரியைகளும்தான் இரட்சிப்புக்கும், நித்திய மகிழ்ச்சிக்கும் வழி நடத்தும் என்றும் கூறுகிறார்கள்.

குரு (எஜமான்) 1. ஆவிக்குரிய, சமயம் சார்ந்த கருத்துக்கள், தேவனுடைய ஆலயமாகக் கருதப்படும் இருதயத்தைச் சார்ந்த அது மூளை அறிவோடு தான் தொடர்புடையது அல்ல என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இருதயம் தேவனுடைய பிரசன்னத்தினால் நிறைந்திருக்கும் பொழுது மூளை அறிவும் தெளிவுபெற்றிருக்கும். பகலின் வெளிச்சமின்றி நம் மாமிசக் கண்கள் ஒன்றையும் காண முடியாததுபோல நமது மனக்கண்கள் உண்மையான வெளிச்சம் அன்றி ஒன்றையும் அறிந்துகொள்ள முடியாது. இருட்டில் ஒருவர் ஓர் கயிறு கிடப்பதை, பாம்பு என்று தவறாக எண்ணமுடியும். அதேபோன்று, இவ்வுலக ஞானிகள் ஆவிக்குரிய உண்மைகளை, சாதாரண மக்கள் அறிந்து கொள்வதினின்று வழிவிலகச் செய்து தவறான பாதையில் செல்ல வழிநடத்துவார்கள். அதனால்தான் சாத்தான் ஏவாளை வஞ்சித்தபொழுது ஓர் செம்மறி ஆட்டையோ அல்லது ஊர் புறாவையோ பயன்படுத்தாது மிருங்கங்களிலேயே மிகத் தந்திரமான சர்ப்பத்தையே பயன்படுத்தினான். அதேபோன்று அவன் கல்விமான்களின் ஞானத்தையும், அறிவாளிகளின் திறமையையும் தனக்குத் தேவையான முறையில் கருவிகளாகப் பயன்படுத்துகிறான். “ஆகையால் சர்ப்பங்களைப்போல வினா உள்ளவர் களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்” என்று மத்.10:16 என்று இயேசு சொல்வதுபோல அறிவாளிகளாகவும், கெட்டிக்காரக்கருமாய் இருப்பவர்களாகவும் இருக்கவேண்டும்.

2. விசுவாசத்தோடு வெண்கல சர்ப்பத்தை நோக்கிப்பார்த்த இஸ்ரவேலர் எவ்வாறு பிழைத்தார்களோ அதேபோன்று, விசுவாசத்துடன் சிலுவையை நோக்கிப் பார்க்கும்பொழுது பாவமன்னிப்பைப் பெறுகிறார்கள் எண்.21:9; யோவா.3:14,15) சிலர் அந்த வெண்கல சர்ப்பத்தை, சாதாரணமாக எண்ணி அதை நம்பாமல், மோசே நமக்கு ஓர் எதிர் நச்சையோ, சக்திவாய்ந்த மருந்தையோ, அல்லது இந்த சர்ப்பத்தின் விஷத்தை முறிக்கும் மருந்தையோ

நமக்கும் கொடுத்தால், அது ஒரு வகைக்கு நம்பத்தக்க காரியம். ஆனால் இந்த கம்பத்தால் விஷமிக்க அந்த நச்சுப் பொருளுக்கு எதிராக எப்படி செயல்படமுடியும்? என்று முறுமுறுத்தார்கள். முறுமுறுத்த அனைவரும் செத்து மடித்தார்கள். அதேபோன்று, இன்றைய நிலையிலும், தேவன் நியமித்த இரட்சிப்பின் வழியை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தங்கள் பாவத்தின் விஷத்தினால் அழிந்துபோவார்கள்.

3. ஒரு வாலிபன் உயரமான சிகரத்திலிருந்து கீழே தவறி விழுந்து விட்டான். காயமடைந்தான், மிக அதிகமான இரத்தம் இழந்துவிட்டதால் மரண தருவாயை நெருங்கி விட்டான். அவனது தந்தை அவனை மருத்துவரிடம் எடுத்துச் சென்றார். மருத்துவர், “ஒரு உயிர் இரத்தத்தில்தான் உள்ளது. இந்த வாலிபனது உடலில் மிகவும் இரத்தம் குறைந்து விட்டது. யாராவது தியாகத்துடன் தனது உயிரையும் இவனுக்காக இழக்க விருப்பத்துடன் இரத்தப் கொடுத்தால் இவன் பிழைக்க முடியும். அல்லது அவன் இறந்து விடுவான்” என கூறினார். அந்த தந்தையின் உள்ளம் மகன் மேலுள்ள அன்பினால் நிரம்பி வழிந்தது. தன் இரத்தத்தை கொடுக்க முன் வந்தார். அந்த வாலிபனின் நரம்புகளில் இரத்தம் ஏற்றப்பட்டவுடன் அவன் சுகமடைந்தான். மனிதன் பரிசுத்தம் என்னும் உயர் ஸ்தலத்திலிருந்து விழுந்துவிட்டான். பாவத்தில் விழுந்து காயப்பட்டு கிடக்கிறான். அந்த காயங்களால் அவனது ஆவிக்குரிய வாழ்வு முடிவை அடைந்து மரிக்கும் தருணத்தில் இருக்கின்றான். ஆனால் அந்நிலையில் என்னை விசுவாசித்தால் எனத நித்தியமான ஆவிக்குரிய இரத்தத்தை அவனுக்குள் ஊற்றுகிறேன். அதனால் மரணத்திலிருந்து விடுதலையாகி நித்திய ஜீவனை அடைய முடியும். “நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்” (யோவா.10:10). இதனால் நித்திய வாழ்வு வாழ இயலும்.

4. பழங்காலம் முதல் மனிதர்கள் மிருகங்களுடைய இரத்தத்தை குடிக்க கூடாதென்ற நியமம் இருந்தது. அதனால் அவர்கள் சில நோய்கள் வராமல் காக்கப்பட முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. மேலும் மிருகங்களுடைய மாம்சத்தையும் புசித்து இரத்தத்தை குடிப்பதனால் மனிதனிலிருந்த சில மிருக இயல்புகள் பலமடையக் கூடும் என்றும் கருதப்பட்டது. ஆனால் இப்பொழுது, “என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது. என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது” (யோவா.6:55). ஏனெனில் அவை

ஆவிக்குரிய ஜீவனை அருளுகின்றன. அவற்றால் பூரணசுகமும் பரம சந்தோஷமும் மகிழ்வும் பெற்றுக்கொள்ள இயலும்.

5. பாவ மன்னிப்பு என்பது முழுமையான இரட்சிப்பு என பொருள்படாது. அது பாவத்திலிருந்து முழுமையான விடுதலை பெறும்பொழுதுதான். ஒரு மனிதன் பாவத்திலிருந்து மன்னிப்பு பெற்றாலும் கூட அவனது பாவத்தினால் வந்த வியாதியினிமித்தம் மரிக்க கூடும். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் தனது மூளையில் ஏற்பட்ட வியாதியினால் நெடுநாளாக பாதிக்கப்பட்டிருந்தான. அப்பொழுது மற்றொரு மனிதனை தாக்கி கொன்றுவிட்டான். அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டபொழுது அவனது உறவினர்கள் அந்த சூழ்நிலையை எடுத்துக்கூறி அவனுக்கு இரக்கம் பாராட்டும்படியாக மேல் முறையீடு செய்தார்கள். அப்பொழுது கொலைக் குற்றத்திலிருந்து மன்னிப்பு தந்து அவனுக்கு விடுதலை கிடைத்தது. ஆனால், அவனுடைய நண்பர்கள் அந்த நற்செய்தியை அவனிடம் அறிவிக்க விரைந்து சென்றபொழுது அவன் மரித்துவிட்டான். அவனை கொலை செய்ய வைத்த அந்த வியாதியினால் இறந்துவிட்டான்.

இந்த மன்னிப்பு கிடைத்ததினால் இந்த கொலையாளி எதுவும் பயன் பெற்றானா? அவனுடைய வியாதியிலிருந்து சுகம் பெற்றிருந்தால்தான் உண்மை பாதுகாப்பு அவனுக்கு இருந்திருக்கும். அப்பொழுதுதான் அந்த மன்னிப்பினால் வரும் உண்மை ஆனந்தத்தை அவன் உணர்ந்திருக்க முடியும். இந்த காரணத்தினாலேயே, மனந்திரும்புகின்ற விசுவாசிகள் தங்கள் பாவநோயிலிருந்தும் பாவத்தினால் வரும் தண்டனையாகிய மரணத்திலிருந்தும் இரட்சிக்கப்படும்படியாக நான் மாம்சத்தில் மனிதனாக உருவாகி வந்தேன். இவ்வாறு பாவத்தின் தண்டனையிலிருந்தும் மரணத்திலிருந்தும் அவர்களை இரட்சித்துக்கொண்டேன் (மத்.1:21). அவர்கள் மரணத்தை மேற்கொண்டு கடந்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

**6.** அநேக மக்களுக்கு வாழ்க்கை ஆபத்து நிறைந்ததாக இருக்கிறது. ஒரு அருவியின் கரையில் இருந்த மரக்கிளையில் காணப்பட்ட தேன்கூடு ஒரு வேடனின் கண்களில் பட்டது. அவன் அந்த கிளைமேல் ஏறி அமர்ந்து அதனை சுவைக்க துவங்கினான். ஆனால் அவன் அறியாமலிருந்தது என்ன? அந்த நேரத்தில் அவன் மரண ஆபத்தில் இருந்தான். அந்த அருவியில் ஒரு முதலை அவனை விழுங்க தன் வாயை பெரிதாக திறந்து

காத்திருந்தது. அந்த மரத்தின் அருகே சில ஓநாய்கள் சுற்றி நின்றன. எல்லாவற்றிலும் மோசமாக, அந்த மரத்தின் வேர்கள் பூச்சியால் அரிக்கப்பட்டு விழுந்து விடும் தருவாயில் இருந்தது. சிறிது நேரத்திற்குள் அந்த மரம் உடைந்து விழுந்தது. அந்த வேடன் சற்றும் அறியாமல் அந்த முதலைக்கு இரையானான். இந்த விதமாகவே மனிதனின் ஆவி, சரீரத்தினால் உடுத்தப்பட்டு இருக்கும்பொழுது, மிகக் குறைந்த நேரம் மட்டுமே, தவறான கடந்து போகக் கூடிய பாவ சந்தோஷங்களை காண்கிறது. பாவம் மனிதனின் மூளையில் தேன் கூண்டு போல காணப்படுகிறது. இவ்வுலகின் மிக பயங்கரமான காட்டின் நடுவில் இருப்பதை அவன் உணரவில்லை. சாத்தான் அவனை துண்டுதுண்டாக கடித்து சிதறடிக்க காத்திருக்கிறான். நரகம் அவனை விழுங்க தன் வாயைத் திறந்து வைத்துள்ளது. அப்பொழுது இவை எல்லாவற்றிலும் மோசமாக, பாவக்கிருமியானது வெளியே தெரியாத வகையில் வேர்களை அரித்து தின்று விட்டது. சரீர வாழ்வு வேர் இழந்தது. அதனால் ஆத்துமா விழுந்து நித்தியமான நரகத்தின் அழிவுக்கு இரையாகிவிட்டது. ஆனால் என்னிடத்தில் வரும் பாவியை நான் பாவத்திலிருந்தும் சாத்தானிடமிருந்தும் நரகத்தினின்றும் மீட்டு இரட்சித்து அவனுக்கு நித்திய மகிழ்ச்சியை அருளுவேன். "அதனை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்து போடமாட்டான்" (யோவா.6:22).

7. சாத்தான் தந்திரமான பேச்சினாலும் வசீகரத்தினாலும் மனிதரை ஏமாற்றி தன்னிடம் இழுத்து விழுங்கி விடுகிறான். எப்படி ஒரு பாம்பு தனது கண்களில் பளிச்சிடும் ஒளியினால் சிறு பறவைகளை கவர்ந்திழுக்கிறதோ அவ்விதமாகவே செய்கிறான். ஆனால் என்மேல் விசுவாசமாயிருப்பவர்களை நான் அந்த பழைய பாம்பினிடமிருந்தும் ஆத்துமாவை அழிக்க மயக்குதல்களை தரும் இந்த உலகத்தினின்றும் மீட்டு இரட்சிக்கிறேன். நான் அவர்களை விடுதலையாக்குகின்றேன். ஒரு பறவை இந்த பூமியின் புவிஈர்ப்பு விசையை எதிர்த்து எளிதாக திறந் வானத்தில் பறந்து செல்வதுபோல அவர்கள் ஜெபமாகிய செட்டைகளால் உயர பறந்து தங்கள் இருதய வாஞ்சையாகிய பரம வீட்டை இறுதியில் அடைந்து விடுகின்றனர். எனது இனிமையான அன்பினால் அவர்கள் கவர்ந்திழுக்கப்படுகிறார்கள்.

8. மஞ்சள் காமாலை நோய் உள்ள ஒரு மனிதன் எல்லாவற்றையும் மஞ்சள் நிறமாக காண்பதுபோல, பாவிக்கும் சித்தாந்தவாதிக்கும் சத்தியம் அவனது

பாவ மாதிரிகளுக்கும், கருத்துகளுக்கும் ஒத்த ரூபமாக காணப்படுகின்றது. அவர்கள் என்னையும் தங்களைப்போன்ற ஒரு பாவி என எண்ணுவார்கள். ஆனால் பாவிகளை இரட்சிக்கும் எனது கிரியையானது இந்த உலகின் நல்மதிப்பீட்டுக்கு சார்ந்ததல்ல. அது விசுவாசிகளின் வாழ்வில் தடுக்கமுடியாத விதத்தில் கிரியை செய்யும். லேவிதான் இன்னும் பிறவாதிருந்த பொழுதே ஆபிரகாமின் அரையிலிருந்து எனக்கு தசமபாகம் செலுத்தினதுபோல எல்லா தலைமுறைகளிலும் என்னை விசுவாசிப்வர்கள் யாவரும் சிலுவையிலிருந்து அவர்கள் பாவத்திற்கென செய்யப்பட்ட பாவமன்னிப்பாகிய மீட்பை பெற்றுக்கொள்வார்கள். இந்த இரட்சிப்பு உலகின் எல்லா நாட்டு மக்களுக்கும் உரியது.

**9.** ஒரு மனிதன் தன் சொந்த முயற்சியினால் செய்யும் நற்கிரியைகளால் இரட்சிப்பை அடையமுடியும் என்பது மிகவும் மடமையானது. அவன் இன்னும் மறுபடியும் பிறக்கவில்லை. உலக அதிபதிகளும், ஆசிரியர்களும் ஒழுக்கத்தைப்பற்றி கூறும்பொழுது “நீ நன்மை செய்து நல்லவனாக ஆகிவிடு” என்கின்றனர். ஆனால் நான், “நீ நற்கிரியை செய்யுமுன்பே நல்லவனாக ஆகிவிடு” எனக் கூறுகிறேன். உனக்குள் புதிய நன்மையான ஜீவன் வரும்பொழுது உருவாகும் விளைவுதான் நல்லசெய்கைகள்.

கசப்பான கனிகளை தொடர்ந்து தரும் ஒரு மரமானது இறுதியில் இனிமையானதை தரும் என மூடன்தான் கூறுவான். உண்மையில் ஒரு கசப்பான மரம் இனிமையான கனிதரும் மரத்தில் ஒட்டி இணைக்கப்பட்டால் அது இனிய மரமாகும். இனிமையான மரத்தின் ஜீவன் அந்த கசப்பான மரத்தில் கடந்து செல்லும்பொழுது அதன் இயற்கையான கசப்புத் தன்மை நீங்கி விடுகிறது. இதுதான் ‘புதிய சிருஷ்டி’ எனப்படுகிறது. ஒரு பாவியும் கூட நன்மையானதை செய்ய விரும்பும்பொழுதும் பாவம் செய்கிறான். ஆனால் அவன் மனந்திரும்பி விசுவாசத்தினால் என்னில் ஒட்டிக்கொள்ளும்பொழுது அவனிலுள்ள பழைய மனிதன் செத்து விடுவதால் அவன் ஒரு புதிய சிருஷ்டியாகிறான். இந்த புதிய வாழ்வு இரட்சிப்பை துவக்கமாக கொண்டுள்ளது. அதன் கனிகளாக நற்கிரியைகள் உருவாகின்றன. இந்த கனி எப்பொழுதும் நிலைத்திருக்கும்.

**10.** அநேகர் மனிதனில் காணப்படும் சில நற்சுபாவங்கள் அவனுக்கு உண்மை சமாதானத்தை தருவதில்லை என அனுபவரீதியாக கற்றுள்ளனர். அது மனிதனுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தையோ அல்லது நித்திய

வாழ்வையோ தருவதில்லை. நித்திய ஜீவனை பெற தேடி என்னிடம் வந்த வாலிபனின் நிலை இதனை காட்டுகிறது. என்னைப்பற்றிய அவனது முதல் எண்ணம் தவறானதாக இருந்தது. சில உலகப்பிரகாரமான ஞானிகளும் அவர்களது பின்பற்றுவோரும் இந்நாளில் காணப்படுவதைப்போல என்னையும் கருதினான். இந்த ஞானிகள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைபோல தங்கள் வாழ்வில் எள்ளளவும் உண்மையற்றவர்களாக இருந்தனர். அதனால் நான் அவனிடம், “நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர்தவிர நல்லவர் ஒருவருமில்லையே?” எனக் கூறினேன். ஆனால் அவன் என்னில் நன்மையையும் ஜீவனையும் அளிக்கும் ஒருவரை காண இயலாதவனாக இருந்தான். நான் அவனை என்னுடன் சேர்த்துக்கொண்டு உண்மையில் நல்லவனாக மாற்றி அவனுக்கு வாழ்வு தர விரும்பினேன். ஆனால் அவன் மனமடிந்து துக்கத்துடன் திரும்பி சென்று விட்டான். அவனது வாழ்க்கை ஒன்றை தெளிவாக காட்டுகிறது. அவன் பத்து கட்டளைகளை கடைபிடித்து நடந்ததும் அவனது நன்மையும் அவனுக்கு மனதிருப்தியையோ நித்திய ஜீவனுக்கான உறுதியையோ தரவில்லை. அவனது நற்கிரியைகள் அவனுக்கு சமாதானத்தை அளித்திருந்தால் அவன் என்னைத் தேடி வந்திருக்கமாட்டான். அல்லது அப்படி வருத்தத்துடன் என்னைவிட்டு சென்றிருக்கமாட்டான்.

இன்னும் சிறிது காலத்திற்குப்பின் பவுல் என்ற வாலிபன் என்னை அறிந்து கொண்டான். அவனது இதயத்தின் வாஞ்சை முற்றிலுமாக நிறைவேறியது. வருத்தத்துடன் திரும்பி சென்றுவிடாமல் அவன் எல்லாவற்றையும் விட்டு என்னை பின்பற்றினான் (பிலி.3:6–15). தனது சுய நீதியை நம்புவதை விட்டு என்னை பின்பற்றுபவன் என்னிடத்திலிருந்து மெய் சமாதானத்தையும், நித்திய ஜீவனையும் பெறுவான்.

# 3

# ஜெபம்

## பாகம் 1

**சீடன்:** சில வேளைகளில் இந்த கேள்வி கேட்கப்படுகிறது. "தேவன் நம்முடைய தேவைகளை முற்றும் அறிந்தவராக இருக்கிறார், தேவன் அவற்றை சிறந்த வழியில் நமக்கு தரும் வழியை தெரிந்தவராக இருக்கின்றார். நல்லவர்களுக்கு மட்டுமல்ல தீயவர்க்கும் செய்யவேண்டியவற்றை அறிந்திருக்கிறார். பின் எப்படி நாம் அவரிடம் அதைக்குறித்து ஜெபம் செய்ய முடியும்? நமது தேவைகள் இம்மைக்காக அல்லது ஆவிக்குரியதாக இருந்தாலும், நமது ஜெபங்களினால் நாம் தேவனது சித்தத்தை மாற்ற இயலுமா?"

**ஆண்டவர்:** 1. அவ்விதமான கேள்வியை கேட்பவர்கள் தங்களுக்கு ஜெபம் என்றால் என்ன என தெரியவில்லை என்று தெளிவாக காட்டுகின்றனர். அவர்கள் ஜெபிக்கும் வாழ்க்கையை வாழாதவர்கள். அல்லது தேவனிடம் ஜெபிப்பது என்பது ஒரு வகையாக பிச்சை கேட்பது போல் அல்ல என்பதை அறிந்திருப்பார்கள். தேவனிடமிருந்து இவ்வுலக தேவைகளுக்கான பொருட்களை பெற முயற்சிப்பது அல்ல ஜெபம். ஜெபம் என்பது தேவனையே உறதியாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுதல், அவர் ஜீவனை துவக்கியவர், ஜீவனின் ஆதாரமான அவரை கண்டடைந்து அவருடன் ஐக்கியத்தில் பிரவேசிக்கும்பொழுது வாழ்வின் முழுமையை பெறுகின்றோம். அவரால் வாழ்வு பரிபூரணப்படுகின்றது. தீமை செய்பவர்களுக்கு, அவர்கள்மேல் உள்ள அன்பினால், தேவன் அவர்கள் உலக வாழ்வின் தேவைகளை தருகிறார். ஆனால் அவர்களுக்கு ஆவிக்குரிய ஜீவன் இல்லாததால் ஆவிக்குரிய தேவைகளை காண்பிப்பதில்லை.

அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அருளினாலும் அவர்களால் அதனை மகிழ்ந்து பாராட்ட இயலாதவர்கள். ஆனால்

விசுவாசிப்பவர்களுக்கு இரண்டுவித ஆசீர்வாதங்களும் அருளப்படும். முக்கியமாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், அதன் விளைவாக சீக்கிரமே அவர்கள் இவ்வுலக ஆசீர்வாதக்ஙளை விரும்பாமல் ஆவிக்குரியவற்றின்மேல் தங்கள் அன்பினை முற்றிலும் செலுத்துவார்கள். தேவனுடைய சித்தத்தை நாம் மாற்றி அமைக்க முடியாது. ஆனால் ஜெபிக்கும் மனிதன் தனக்குரிய தேவசித்தத்தை கண்டுகொள்ள இயலும். இவ்விதமான மனிதர்களுக்கு, அவர்கள் இதயத்தின் ஆழத்தில் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார். அவர்களுடன் பேசி ஐக்கியம் கொள்கின்றார். அவருடைய கிருபையான நோக்கங்கள் அவர்கள் நன்மைக்கென்றே என உணர்த்துகின்றார். அப்பொழுது சந்தேகங்களும் உறுத்தும் பிரச்சினைகளும் என்றென்றைக்குமாய் கடந்துபோய் விடுகின்றன.

**2.** ஜெபம் என்பது பரிசுத்த ஆவியானவருக்குள்ளாக சுவாசிப்பதாகும். ஜெபிப்பவர்களின் வாழ்வில் தேவன் தமது பரிசுத்த ஆவியானவரை ஊற்றுகின்றார். அவர்கள் "ஜீவ ஆத்துமாக்கள்" ஆகின்றனர் (ஆதி.2:7; யோவா.20:22). அவர்கள் மரிப்பதில்லை. அவர்களது ஆவிக்குரிய நுரையீரல்கள் பரிசுத்த ஆவியானவரால் ஜெபமாக ஊற்றப்படுகின்றன. அவர்கள் ஆவி சுகம், பெலன், நித்திய ஜீவனால் நிரம்பிவிடுகின்றது.

அன்பான தேவன் எல்லா மனிதருக்கும் இலவசமாக ஆவிக்குரிய உலகப்பிரகாரமான தேவைகளை தருகின்றார். ஆனால் அவர் இரட்சிப்பையும் பரிசுத்த ஆவியானவரையும் இலவசமாக தருவதால் சாதாரணமாக மதிப்பிட ஏதுவாகின்றது. ஆனால் ஜெபம் அந்த ஈவின் மதிப்பை போதிக்கும். காற்று, தண்ணீர், வெப்பம், வெளிச்சம் இல்லாமல் வாழ்வது இயலாது. அவ்வாறே மனிதரது ஆவிக்குரிய வாழ்வுக்கென தேவன் இலவசமாக தரும் தெய்வீக ஈவை மனிதர் குறைவாக மதிப்பிட்டு தங்கள் சிருஷ்டிகருக்கு நன்றி செலுத்துவதில்லை. ஆனால் தங்கம், வெள்ளி, அரிய நகைகள், போன்றவற்றை பாடுபட்டு பெற்று அதனை மிக மேன்மையாக கருதுகின்றனர். அவற்றால் சரீர பசியையும் தாகத்தையும் நீக்க இயலாது. ஆத்தும ஏக்கங்களை திருப்திபடுத்த இயலாது. இவ்வுலகத்திற்குரிய மனிதர்கள் இவ்வித மூடத்தனத்துடன் ஆவிக்குரியவற்றை அறியாதுள்ளனர். ஆனால் ஜெபிக்கும் மனிதருக்கு உண்மை ஞானமும் நித்திய ஜீவனும் அருளப்படும்.

**3.** இவ்வுலகம் பரந்து விரிந்த கடல்போலுள்ளது. மனிதர்கள் அதில் மூழ்கி

அமிழ்ந்து விடுகின்றனர். ஆனால் கடல் வாழ் உயிரினங்கள் ஆழமான தண்ணீரிலேயே வாழ்கின்றன. எப்படியெனில் அவை மேலே வந்து தங்கள் வாயை திறந்து தேவையான அளவு காற்றை பெற்றுக்கொள்கின்றன. அதனால் ஆழங்களிலே வாழ்கின்றன. அதைப்போல் தனிப்பட்ட ஜெபம் செய்வதனால் வாழ்க்கை சமுத்திரத்துக்கு மேலே வந்து உயிர்தரும் பரிசுத்த ஆவியானவரை பெறும் மனிதர்கள் இவ்வுலகில் பாதுகாப்புடன் வாழ்கின்றனர்.

4. மீன் தனது முழு வாழ்வையும் கடலின் உப்பு தண்ணீரில் வாழ்ந்தாலும் அதற்குள் உப்பு ஏறாது. ஏனெனில் அதற்குள் உயிர் இருக்கின்றது. அதைப்போலவே ஜெபிக்கும் ஒரு மனிதன் பாவக்கறை படிந்த உலகில் வாழ்ந்தாலும் அவனுக்குள் பாவக்கறை படுவதில்லை, ஏனெனில் ஜெபத்தினால் அவன் வாழ்க்கை காப்பாற்றப்படுகின்றது.

5. கடலின் உப்புத் தண்ணீர் மேல் சூரியனின் சூடான ஒளிக்கதிர்கள் படும்பொழுது அவை நீராவியாக சென்று மேகமாக உருவாகின்றது. அது இனிமையும் புத்துணர்வும் தரும் தண்ணீர் ஆகி மழையாக பூமியின்மேல் பெய்கின்றது. (கடல் நீர் மேலெழும்பும்பொழுது தனது உப்பையும் கசப்பையும் விட்டுச் செல்கின்றது). அதைப்போன்றே ஜெபிக்கும் ஒரு மனிதனின் எண்ணங்களும் விருப்பங்களும் அவனது ஆத்துமாவில் இருந்து புகைமேகம்போல மேல் சென்று, நீதியின் சூரியனால் சுத்திகரிக்கப்பட்டு விடுகின்றன. அவனது ஜெபங்கள் மகிமையான மேகம்போல விண்ணிலிருந்து ஆசீர்வாதமான மழையாக பூமியிலுள்ளோருக்கு புத்துணர்வை பொழிகின்றது.

6. நீர் வாழ் பறவைகள் தங்கள் வாழ்நாளை தண்ணீரில் நீந்தி செல்வதில் கழிக்கின்றன. ஆனால் பறக்க வேண்டிய நிலைவரும்பொழுது அதன் சிறகுகள் முற்றிலும் உலர்ந்த நிலையில் காணப்படுகின்றன. அதைப்போலவே ஜெபித்து வாழும் மனிதர்கள் இந்த உலகில் இருந்தாலும் அவர்கள் உயர எழும்பி இந்த பாவம் நிறைந்த உலகைவிட்டு நித்திய இளைப்பாறுதலின் வீட்டை அடைய பறக்கும் வேளை வரும்பொழுது அவர்களில் பாவத்தின் தடயம் காணப்படுவதில்லை.

7. ஒரு கப்பல் தண்ணீரில் தான் மிதந்து நிற்க வேண்டும். ஆனால் தண்ணீர் அந்த கப்பலுக்குள் வருவது தவிர்க்க வேண்டியதும் அபாயகரமும்

ஆனது. அதைப்போன்றே ஒரு மனிதன் இவ்வுலகில் வாழ்வது நன்மையும் மற்றவர்களும் உதவியுமாக இருக்கின்றது. அவன் தன்னை உலகத்தின் மிதக்கும் நிலையில் மேற்கொண்டு வாழ்வது மற்றவர்களையும் தனனையும் பரமஸ்தலத்தில் கொண்டு சேர்க்க உதவும். ஆனால் உலகம் அவனது இதயத்திற்குள்ளே பிரவேசித்து விட்டால் அது மரணமும் அழிவுமானது. அதனால் ஜெபிக்கும் ஒரு மனிதன் தனது இதயத்தை அவருடைய ஆலயமாக காத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுது இவ்வுலகிலும் மறுமையிலும் சமாதானமாக இளைப்பாற இயலும்.

8. தண்ணீர் இல்லையென்றால் வாழ இயலாது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் தண்ணீரில் மூழ்கிவிட்டால் நாம் மூச்சுவிட இயலாமல் மரிக்க நேரிடும். நாம் குடிக்கவும் மற்ற தேவைகளுக்கும் தண்ணீரை பயன்படுத்துவது தேவையாக உள்ளது. ஆனால் நாம் தண்ணீருக்குள் விழுந்து மூழ்கி விடக்கூடாது. அதைப்போன்றே இந்த உலகத்தையும் உலகப் பொருட்களையும் எச்சரிக்கையுடன் உபயோகிக்க வேண்டும். அவ்வ இன்றி வாழ்க்கை கடினமாக இருக்கும். மனிதர் பயன்படுத்துவதற்காகவே தேவன் உலகத்தை படைத்தார். மனிதர் தங்களையே அதற்குள் மூழ்கடிக்கக் கூடாது. அப்படியானால் ஜெபமாகிய மூச்சு நின்று போய் மரிக்க நேரிடும்.

9. ஜெப வாழ்வை வாழ்வதை நிறுத்தும்பொழுது ஆவி தன்னை இழந்துபோகின்றது. உதவியாக தெரிந்த உலகத்தின் பொருட்கள் துக்கத்தையும், அழிவையும் தருகின்றன. சூரியன் தனது ஒளியினாலும் வெப்பத்தினாலும் காய்கறிகள் வளர உதவும். அவை காய்ந்து அழிந்திடவும் செய்யும். காற்று எல்லாவற்றுக்கும் பலனைத்தரும், அவை அழிந்து விடவும் செய்ய இயலும். அதனால் 'விழித்திருந்து ஜெபிக்க வேண்டும்.'

10. நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்திற்குரியவர்களாக வாழக்கூடாது. நாம் இந்த உலகத்தாரல்ல. அப்பொழுது இவ்வுலகின் பொருட்கள் பயனுள்ளதாகவும் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் உதவியாக இருக்கும். ஆனால் ஒரு நிபந்தனை உண்டு. ஆவி தன் முகத்தை எப்பொழுதும் நீதியின் சூரியனின் திசையில் திருப்பியிருக்கவேண்டும். சில அழுக்கான நிலங்களில் வளர்ந்துள்ள மலர் செடிகளின் நறுமணம் அங்குள்ள தீமையான நாற்றத்தை மேற்கொள்கிறது. அந்த செடிகள் சூரியனை நோக்கியிருந்து வெளிச்சமும் வெப்பமும் பெறுகின்றன. அந்த

அழுக்கான நிலம் செடிகளுக்கு தீமையாக இராமல் உரமாக இருந்து அவை வளர அதைப் போன்றே, ஜெபம் செய்யும் ஒரு மனிதனின் இதயம் என்னையே நோக்கி திரும்பியிருக்கிறது. என்னிடமிருந்து ஒளியும் வெப்பமும் பெறுகிறான். இந்த தீய உலகின் துர்கந்தமான சூழல் மத்தியிலே அவனது பரிசுத்தமான வாழ்வின் நறுமணம் என்னை மகிமைப்படுத்துகின்றது. அவனிடத்திலிருந்து இனிய மணம் மட்டுமல்ல என்றென்றும் நிலைத்திருக்கும் கனியும் உருவாகின்றது.

## பாகம் 2

1. ஜெபத்தின் மெய்பொருள் ஜெபமில்லாமல் தேவன் நமக்கு எதுவும் தரமாட்டார் என்றோ நம்முடைய தேவைகளை அறியமாட்டார் என்றோ பொருள் அல்ல. ஜெபத்தின் மூலமாக ஆசீர்வாதங்களை அருளும் தேவனையே நெருங்கி பற்றிக்கொள்வதுதான் ஜெபம். அப்பொழுது அவர் தர விரும்பும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்கிறோம். அவ்வாறே அப்போஸ்தலர்கள் மேல் ஆவியனாவரின் நிறைவு முதல் நாளே கிடைத்து விடவில்லை. பத்து நாட்கள் சிறப்பான ஆயத்தத்திற்கு பின்புதான் பெற்றுக்கொண்டார்கள்.

ஆவலுடன் எதிர்பார்த்து காத்திராமல் ஒருவன் ஒரு ஆசீர்வாதத்தை பெற்றால் போதுமான அளவு அவன் அதை சிறப்பாக கருதுவதில்லை. அதனை நீண்ட நாள் காத்துக்கொள்வதுமில்லை. எடுத்துக்காட்டாக, சவுல், தான் தேடாதபொழுதே பரிசுத்த ஆவியானவரையும் ராஜ்யபாரத்தையும் பெற்றுக்கொண்டான். வெகு சீக்கிரமே இழந்து விட்டான். சவுல் தன் வீட்டிலிருந்து தன் காணாமல்போன பிராணிகளை தேடிச்சென்றான் (1 சாமு.9:3, 10:11, 5:13–14, 31:4).

2. ஜெபத்தால் நிறைந்து வாழும் மனிதன் மட்டுமே தேவனை ஆவியிலும் உண்மையிலும் தொழுதுகொள்ள முடியும் பலர் ஆராதனை வேளைகளில் பரிசுத்த ஆவியானவரது சமூகத்தாலும் போதனையாலும் பாவ அறிக்கை செய்து, தலை வணங்கி மிகுந்த மனவாஞ்சையுடன் காணப்படுவர். ஆனால் சபையைவிட்டு வெளியே செல்லும் பொழுதே பிரகாசமிழந்து தான் முந்தி இருந்த நிலையை அடைந்து விடுவார்கள்.

3. நல்ல கனிதரும் ஒரு மரத்தையோ மலர் தரும் செடியையோ நாம் சரியாக கவனிக்காவிட்டால் அது காட்டுசெடியை போலாகிவிடும். அதே போன்று, ஒரு விசுவாசி ஜெபத்தையும் ஆவிக்குரிய வாழ்க்கையையும் கவனமாக கைக் கொள்ளாவிடில் என்னில் நிலைத்திருப்பதில்லை. அதனால் ஆசீர்வாதமான ஆவிக்குரிய நிலையிலிருந்து விழுந்து தங்கள் பழைய பாவ வாழ்க்கையில் மறுபடியும் மூழ்கி விடக்கூடும்.

4. ஒரு குளத்தினருகில் அல்லது ஏரிக்கரையில் கொக்கு ஒன்று அசையாமல் நிற்பதை நாம் பார்க்கும்பொழுது, அது அந்த தண்ணீரை உற்றுப்பார்க்கும்பொழுது தேவனுடைய சிருஷ்டிப்பைக் குறித்து அல்லது அந்த அருமையான தண்ணீரை பார்த்து மகிழ்கிறது என நினைக்கத் தோன்றும். ஆனால் அது அப்படியல்ல! அது மணிக்கணக்கில் அசையாமல் நின்று கொண்டிருக்கும். ஆனால் சிறு தவளை அல்லது மீன் வருவதைக் கண்டதும் அதன்மேல் குதித்து கொத்தி விழுங்கிவிடும். அநேகர் ஜெபத்தைக் குறித்தும் தியானத்தைக் குறித்தும் இவ்வித மனநிலையுடன் உள்ளனர். அளவிடப்பட முடியாத கடலைப்போன்ற வலிமையுள்ள தேவனிடம் வரும்பொழுது அவர்கள் தெய்வீக மனப்பான்மைப்பற்றியோ, அவரது அன்பைப் பற்றியோ, அவர் தரும் பாவமன்னிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அவர் நம் ஆத்துமாவின் தாகத்தை தீர்ப்பவர் என்பதைப்பற்றியே சற்றும் நினைப்பதில்லை. அவர்கள் மன எண்ணமெல்லாம் சிறப்பான ஒரு விருப்பமான பொருளை பெற்றுக்கொள்வதே, அதன் மூலமாக கடந்துபோகிற இந்த உலக இன்பங்களில் முழுவதுமாக மூழ்கி திளைப்பதுதான். இவ்விதமாக அவர்கள் உண்மை சமாதானத்தின் ஊற்றைவிட்டு திரும்பி சென்று அழிந்து போகிற இந்த உலக சந்தோஷங்களில் தங்களை மாய்த்துக் கொள்கிறார்கள்.

5. தண்ணீரும் பெட்ரோலும் பூமிக்குள்ளிருந்து கிடைக்கின்றன. அவை பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக தோற்றமளிக்கின்றன. ஆனால் இயற்கை சுபாவத்தில் அவ்விரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானவை. ஒன்று எரிகிற நெருப்பை அவித்துவிடும். மற்றது எரியவைக்கும். அவ்வாறே இந்த உலகமும் அதன் ஐஸ்வர்யமும், இருதயமும் தேவன் மேலுள்ள அதன் தாகமும் ஒன்றுபோல காணப்படலாம். இதயத்தின் வாஞ்சையை இவ்வுலக பொருள், பெருமை, உயர்வுகள் ஆகியவற்றைக் கொண்டு நிறைவேற்ற முயற்சிப்பது நெருப்பை பெட்ரோல் ஊற்றி அணைக்க முயல்வதாகும்; இருதயமோ

தன்னை உருவாக்கின தேவனால் மாத்திரமே ஏக்கமும் வாஞ்சையும் நிறைவேறக் காணும் (சங்.42:1,2). என்னிடத்தில் வருகிறவனுக்கு நான் ஜீவதண்ணீரை தருகிறேன். "நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊருகிற நீரூற்றாயிருக்கும்" (யோவா.4:14).

6. மனிதர்கள் வீணாக இந்த உலகத்திலும், உலகத்திலுள்ள பொருட்களினாலும் சமாதானத்தை தேடி வீண் முயற்சி செய்கின்றனர். ஆனால் அனுபவத்தினால் உண்மையான சமாதானமும் திருப்தியும் உலகினால் கிடைப்பதில்லை என்பதை அறிந்துகொள்கின்றனர். ஒரு வெங்காயம் தன் கரத்தில் கிடைத்தபொழுது அதன் ஒவ்வொரு தோலாக பிரித்து ஏதாகிலும் உள்ளே இருக்குமா என தேடிப்பார்க்கும் சிறுவனைப்போல் உள்ளனர். ஒரு டப்பாவினுள் மூடியை திறந்தால் ஏதாகிலும் கிடைக்கும் என்பதுபோல எதிர்பார்ப்புடன் பார்த்த அந்த சிறுவனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. ஒரு வெங்காயம் பல அடுக்கான தோல்களை உடையது. இவ்வுலகமும் அதைச் சார்ந்த பொருட்களும் மாயைதான் என நிரூபிக்கப்பட்டுள்ளது (பிர.12:8). இதை அறிந்தபின் மனிதன் உண்மை சமாதானத்தின் ஊற்றை காண்கிறான் (ஏசா.55:1; எரே.2:13; வெளி.22:17).

7. உலகம் கானல் நீரைப் போன்றது. உண்மையை தேடும் ஒருவன் தன்னுடைய ஆவிக்குரிய தாகத்தை தணிக்க ஏதாகிலும் கிடைக்குமா எனத் தேடுகிறான். ஆனால் ஏமாற்றமும் நம்பிக்கையின்மையும் மட்டுமே அவனை சந்திக்கின்றன. ஜீவ தண்ணீரானதை மனிதனால் செய்யப்பட்டவைகளிலும், வெடிப்புள்ள தொட்டிகளிலும் கண்டுபிடிக்க இயலாது. ஆனால் என்னிடம் தூய இருதயத்துடனும் ஜெபத்திலும் நெருங்கி சேருபவன் என்னில் ஜீவ தண்ணீர் ஊற்றை கண்டடைவான். அதன் மூலம் திருப்தியும், புத்துணர்வும் நித்திய வாழ்வும் கிடைக்கும் (ஏசா.55:1; எரே.2:13; வெளி.22:17).

8. ஒரு பெண் தன் குழந்தையை கரங்களில் சுமந்து கொண்டு மலைப்பாதையில் சென்றபொழுது, அந்த குழந்தை அருகிலிருந்த அழகான மலர் ஒன்றை பார்த்துவிட்டது; உடனே துள்ளி குதித்து தன் தாயின் கரங்களிலிருந்து எழும்பி கீழே மலைச் சரிவில் ஒரு பாறையில் விழுந்து தலையில் அடிபட்டதால் உடனே மரித்துவிட்டது. அந்த குழந்தையின் பாதுகாப்பு தாயின் கரங்களில் தான் இருந்தது என தெளிவாகின்றது,

அக்குழந்தையின் மரணத்துக்கு காரணமான அந்த ஈர்க்கும் மலர்களில் இல்லை. தன் வாழ்வில் ஜெப அனுபவம் இல்லாத விசுவாசியும் இப்படியே இருக்கிறான். இவ்வுலகின் வசீகரமான இன்பங்கள், கடந்து போகக் கூடியவை என்றாலும் அவன் எனது அன்பை மறக்கிறான். தாயின் அன்பைக் காட்டிலும் என் அன்பு பெரியது. அவ்வன்பையும் ஆவிக்குரிய பாலையும் புறக்கணித்து எனது கரத்திலிருந்து துள்ளி விழுந்து மறைகிறான்.

9. தாயின் அன்பு ஆதரவு, ஒரு குழந்தையின் சிறு முயற்சியால் அதற்க கிட்டும்படியாக அமைந்துள்ளது. எனது குழந்தைகளும் என்னைத் தேடி வராமலிருந்தால் அவர்கள் ஆத்துமாவை காத்திடும் ஆவிக்குரிய பலனான பாலை பெற இயலாது. ஒரு சிறு குழந்தைக்கு அதனை யாரும் சொல்லித் தருவதில்லை, சுயமாகவே அது தாயினிடம் நெருங்கி சேருகின்றது. அந்த உணர்வு அதற்கு உள்ளது. அதைப்போன்றே ஆவியினால் பிறந்தவர்களும் என்னிடத்தில் நெருங்கி ஜெபிக்க ஆவிக்குரிய உணர்வை பெற்றுள்ளனர். இந்த உலக சித்தாந்தமும் ஞானமும் அதை போதிப்பதில்லை.

10. இயற்கையாக மனிதனிடத்தில் பசியும் தாகமும் இருக்கும்படியாக நான உருவாக்கியுள்ளேன். இல்லையெனில் அவன் தன்னை கடவுளாக கருதக்கூடும். ஆனால் ஒவ்வொரு நாளும் அவனுடைய தேவைகள், தன்னை உருவாக்கின மகத்தானவரிடம் தன் வாழ்வு இணைக்கப்பட்டிருப்பதை நினைவூட்டுகின்றன. தன்னுடைய குறைவுகளும் தேவைகளும் நன்கு தெரிவதனால் அவன் என்னில் நிலைத்திருக்கிறான். நான் அவனில் நிலைத்திருக்கிறேன். அப்பொழுது அவன் என்னில் ஆனந்தமும் மகிழ்ச்சியும் அடைகிறான்.

## பாகம் 3

1. ஜெபிப்பது என்பது என்னுடன் உரையாடுவதுதான். அவ்வாறு என்னுடன் ஐக்கியமாகவும் நெருங்கியும் இருப்பது எனது சாயலை தருகின்றது. ஒரு வகை பூச்சி பசுமையான இலைகளை உண்டு அவற்றுக்குள் வாழ்வதால் பச்சை நிறமாக மாறுகின்றது. பனிப்பிரதேசத்தில் வாழும் துருவ கரடிக்கு பனிக்கட்டி போன்ற வெண்மை நிறம் கிடைக்கிறது. வங்காள காடுகளில் வாழும் புலியின் தோலின்மேல் அங்குள்ள நாணல் செடிகளின்

அடையாளம்போல் காணப்படுகின்றது.அதைப் போன்றே ஜெபத்தின் மூலமாக என்னுடன் இணைந்து வாழ்பவர்கள் எனது சாயலில் உருவாக்கப் படுகின்றனர்.

2. ஒரு சிறிதளவு நேரமே பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் என்னுடன் ஐக்கியப்பட அந்த மலையின்மேல் அழைத்துச் சென்றேன். நான் மறுரூபமானபொழுது என்னுடன் மோசேயும் எலியாவும் அவர்களுக்கு காணப்பட்டார்கள். அந்த பரம மகிமையின் சிறிதளவு தரிசனத்தால் அவர்கள் முழுவதுமாக ஆட்கொள்ளப்பட்டார்கள். மூன்று கூடாரங்களை அமைத்துநாம் இங்கேயே வாழ்ந்துவிடலாம் என்றனர் (மத்.17:1–5). என்னுடன் நிலைத்திருந்த பரிசுத்தவான்களுடனும் எண்ணற்ற தூதர்களுடனும் மாறாத எனது முழுமையான தரிசனத்தை காணும் மகிமை எவ்வளவு அற்புதமானதாகவும் ஆனந்தமாகவும் விளங்கும்! யோவா.17:24; யாக்.1:17 ஜெபிக்கும் ஒரு மனிதன் ஒரு போதும் தனிமையாக இருப்பதில்லை. என்னுடனும் சகல பரிசுத்தவான்களுடனும் ஐக்கியம் கொள்கிறான் (மத்.28:20; சகரி.3:7–8).

3. காட்டு மிருகங்களை அடக்கி பழக்கப்படுதி பயன்படுத்துவதும்; மின்னல், காற்று, வெளிச்சம் ஆகிய இயற்கை சக்திகளை மேற்கொள்வலும் உலகத்தையும் சாத்தானையும் அதன் ஆசை இச்சைகளையும் எதிர்த்து மேற்கொள்வதுதான் மிக உண்மையான தேவை. ஜெபமே வாழ்வாக கொள்ளும் மனிதர்களுக்கு சத்துருவின் எல்லா வல்லமையையும் மேற்கொண்டு ஜெயம் பெற நான் பலன் தருகின்றேன். (லூக்.10:17,20) அவர்கள் உலகத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் என்னில் நிலைத்திருப்பதால் உன்னதங்களில் வாசம் செய்கிறார்கள் (எபே.2:6). சாத்தான் கீழே இருக்கிறான், அவர்கள் உன்னத உயரத்தில் உள்ளனர். அவனால் அவர்களை நெருங்க முடியாது. அவர்கள் என்னில் நிலைத்திருப்பதால் பாதுகாப்புடன் ஒரு பயமும் நடுக்கமுமின்றி வாழ்வார்கள்.

மனிதர்கள் இயற்கை சக்திகளை மேற்கொண்டாலும் அவர்கள் வானத்தின் எல்லைகளுக்கு மேல் செல்லமுடியாது. ஆனால் ஜெபம் செய்யும் ஒரு மனிதன் சாத்தானையும் சுயத்தையும் மேற்கொள்கிறான். நித்திய பரலோகத்தை மனக்கண்களால் காண்கிறான்.

4. மலர்களிலிருந்து தேனை எடுக்கும் தேனியானது மலரின்

நிறத்தையோ மணத்தையோ நீக்குவதில்லை, அதைப்போன்றே ஜெபிக்கும் ஓர் மனிதன் தேவனுடைய சிருஷ்டிப்பிலிருந்து நன்மையையும் மகிழ்ச்சியையும் சேர்க்கின்றான். பல இடங்களில் உள்ள விதவிதமான மலர்களிலிருந்து தேனீக்கள் தேன் எடுப்பதுபோல தேவ மனிதன் இனிமையான எண்ணங்களையும் உறவுகளையும் சிருஷ்டிப்பிலிருந்து கண்டு தன்னை உருவாக்கின கர்த்தரின் ஐக்கியத்தால் தன் இருதயத்தில் சத்தியமாகிய தேனை சேர்க்கின்றான். எல்லாவற்றிலும் எல்லா நேரங்களிலும் அவருடன் சமாதானமாக இருப்பதால் இனிய தேனாக தேவனை ருசித்து மகிழ்கின்றான்.

5. நமது இருதயங்களில் பரிசுத்த ஆவியானவராகிய எண்ணையை பெற்று காத்துக்கொள்வது இன்றைய தேவை. அந்த ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் போல, (மத்.25:1–13) அல்லவென்றால் ஐந்து புத்தியில்லாத கன்னிகைகள் போல வருத்தத்தையும் சஞ்சலத்தையும் காண நேரிடும். இப்பொழுதே நீங்கள் பரம சத்திய ஓய்வு நாளுக்கான மன்னாவையும் சேர்த்து வைக்கவேண்டும். இல்லையெனில் துயரமும் துக்கமும் நேரிடும் (யாத்.16:15,27).

"நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வு நாளிலாவது சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்" (மத்.24:20).

"அது நித்திய இளைப்பாறுதலுக்கான ஆயிரம் வருட ஆட்சி இதுவரை சம்பவித்திராதது.

தட்ப வெப்ப சூழ்நிலையானது செடிகளின் வளர்ச்சியிலும், மலர்களின் நிறங்களிலும், அமைப்பிலும் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவதுபோல என்னுடன் தொடர்ந்து ஐக்கிய உறவு கொள்பவர்கள் யாவரும் ஆவிக்குரிய தன்மையில் வளர்ச்சி பெற்று தங்கள் பழக்கங்கள், உருவம், நடை உடை பாவனைகள் எல்லாவற்றிலும் மாறுதல் அடைவார்கள். பழைய மனிதனை களைந்துவிட்டு என்னுடைய மகிமையுள்ள தூய்மையான சாயலில் மறுரூபடைவார்கள்."

அந்த விபசார ஸ்திரீயை தண்டிப்பதற்காக கொண்டு வந்த மக்களின் மனதில் உள்ள தீமையான நிலைபற்றி எனது விரலினால் தரையில் எழுதினேன். அதனால் அவர்கள் வெட்கமடைந்து ஒவ்வொருவராக அங்கிருந்து சென்று விட்டார்கள். என்னுடைய விரலினால் எனது

ஊழியத்தின் பாவ காயங்களை இரகசியமாக சுட்டிக் காட்டுகின்றேன். அவர்கள் மனந்திரும்பினால், அதே விரலினால் அவர்களை தொட்டு சுகமளிக்கின்றேன். ஒரு சிறு குழந்தை தன் தந்தையின் விரல்களை தன் கையால் பிடித்துக்கொண்டு அவருடன் நடப்பது போல நானும் எனது பிள்ளைகளை இவ்வுலகிலிருந்து இளைப்பாறுதலின் வீட்டிற்கும், நித்திய சமாதானத்துக்கும் எனது விரல்களால் பிடித்து வழி நடத்தி செய்கிறேன் (யோவா.14:2,3).

7. சில வேளைகளில் மனிதர்கள் என் நாமத்தினால் பிதாவிடம் ஜெபம் செய்கின்றனர். ஆனால் என்னில் நிலைத்திருப்பதில்லை. எனது பெயர் அவர்கள் வாயிலும் உதடுகளிலும் உள்ளது. ஆனால் அவர்கள் உள்ளத்திலும் வாழ்க்கையிலும் இல்லை. தாங்கள் கேட்டதை பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு இதுவே காரணமாக உள்ளது. ஆனால் நான் அவர்களிலும் அவர்கள் என்னிலும் நிலைத்திருக்கும்பொழுது அவர்கள் பிதாவினிடத்தில் கேட்டு வேண்டிக்கொள்வதை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள். ஏனெனில் அவர்கள் மரித்த ஆவியான்வரது நடத்துதலினால் அவர் காட்டும் வழியில் ஜெபிக்கின்றனர். பரிசுத்த ஆவியானவர் பரமபிதாவுக்கு மகிமைகொண்டு வரவும் மற்றவர்களுக்கும் அவர்களுக்கும் சிறந்ததாகவும் உள்ளதை காட்டுகின்றார். அல்லது, ஒரு கெட்ட மகன் ஒரு ஆளுநரிடமிருந்து பெற்ற பதிலை பெறுவார்கள். அந்த கெட்ட மகனுடைய தந்தை அந்த ஆளுநரிடம் மிகவும் வீரமும் நன்னடத்தையும் உள்ளவராக பணிபுரிந்திருந்தார். ஒரு வேலைக்காகவும் சலுகைக்காகவும் தனது தந்தையின் பெயரால் அந்த மகன் ஒரு விண்ணப்பம் கொடுத்தபொழுது, ஆளுநர் அவனது தீமையான வாழ்க்கையையும், தீய பழக்கங்களையும் சுட்டிக்காண்பித்து கூறினார், "உன்னுடைய தந்தையின் பெயரால் என்னிடம் வேண்டுகோள் தரவேண்டாம். நீ முதலில் திரும்பி சென்று அவருடைய நல்ல மாதிரியான வாழ்க்கையை பின்பற்று. அவருடைய உயர்ந்த தகுதி உனது உதடுகளிலல்ல, உனது வாழ்வில் காணப்படட்டும், அப்பொழுதுதான் உனது விண்ணப்பம் அங்கீகரிக்கப்படும்."

8. தங்கள் உதடுகளால் மட்டும் என்னை ஆராதித்து துதிப்பவர்களுக்கும், தங்கள் உள்ளத்திலிருந்து துதிப்பவர்களுக்கும் இடைய ஒரு பெரிய வித்தியாசம் இருக்கின்றது. எடுத்துக்காட்டாக உண்மையாக தொழுது கொள்ளும் ஒரு நபர் மற்ற ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய கண்கள்

திறக்கப்பட்டு அவரும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என தொடர்ந்து ஜெபித்து வந்தார். அந்த மற்ற மனிதனோ பெயருக்கு என்னை தொழுபவனாக இருந்தான். அவன் இந்த உண்மை விசுவாசிமேல் பகைமை உடையவனாக அடிக்கடி அவன் குருடாக ஆகிவிடவேண்டும் என ஜெபம் செய்தான். முடிவில் தேவனடைய அன்பான சித்தத்தின்படி அந்த உண்மையாய் தொழுது கொள்ளும் நபரின் ஜெபம் கேட்கப்பட்டது. மாய்மாலக்காரனாக இருந்த அந்த மற்றொரு மனிதன் ஆவிக்குரிய பார்வையை பெற்றான். மிகுந்த மனமகிழ்வுடன் உண்மை விசுவாசியாக மாறினான். என்னை உண்மையாய் தொழுதுவந்த விசுவாசிக்கு மிக அன்பான சகோதரனாகி ஆகிவிட்டான்.

9. ஜெபம் பல வழிகளிலும் இயலாத ஒன்றை மனிதர்களுக்கு வாய்க்க செய்கின்றது. உலக ஞானத்தாலும் கருத்துகளாலும் முற்றிலும் இயலாது என கருதப்படுபவற்றை ஜெயமானது அவர்களை அற்புதமாக வாழ்வில் அனுபவிக்கச் செய்கின்றது. விஞ்ஞான அறிவு பொருந்திய மனிதர்கள் எல்லாவற்றையும் சிருஷ்டித்து நடத்திவிடும் தேவன் தமது இயற்கை சிருஷ்டியின் விதிகளால் கட்டப்பட கூடாத அளவு மகிமையுள்ளவர் என்பதை அறிந்து கொள்வதில்லை. எல்லா சட்டதிட்டங்களையும் அமைத்தவருடைய வழிகள் அளவிடப் படாதவைகள், கற்பனைக்கு எட்டாதவைகள். அவரது நித்திய சித்தமும் நோக்கமும் அவரது சிருஷ்டிகளை ஆசீர்வதிப்பதுதான். ஆனால் சுபாவ மனிதர்கள் அதனை அறிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் ஆவிக்குரியவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படும் (1 கொரி.2:14).

எல்லாவற்றையும் விட பெரிய அற்புதம் மனிதனின் மறுபடியும் பிறக்கும் அனுபவமே, இந்த அற்புதத்தை அனுபவத்தில் அறிந்த மனிதனுக்கு எல்லாம் சாத்தியமானவை. இப்பொழுது குளிர் பிரதேசங்களில் தண்ணீரால் அமைந்த பாலம் என்பது சாதாரண காட்சி. ஏனெனில் ஆற்றின் மேல்பகுதி கடினமாக உறைந்து பனிக்கட்டியாகிவிடுகிறது. தண்ணீர் கீழே இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறது. மனிதர்கள் அந்த பனிக்கட்டி பாலத்தின்மேல் எளிதாகவும் பாதுகாப்பாகவும் நடந்து ஆற்றை கடந்து செல்கின்றனர். ஆனால் இப்படி ஒரு பாலம் இருப்பதை எப்பொழுதும் வியர்வையிலும் உஷ்ணத்திலும் வாழும் வெப்ப நாட்டில் உள்ளவர்களிடம் கூறினால், அப்படிப்பட்ட ஒன்று இருக்கவே இயலாது அது இயற்கைவிதிக்கு எதிரானது

என கருதுவார்கள். மறுபடியும் பிறந்து ஜெபம் செய்வதனால் ஆவிக்குரிய வாழ்வை கடைப்பிடித்து வாழ்பவருக்கும், உலகப் பிரகாரமாக பொருட்களையே முக்கியமாக வாழ்பவருக்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. அவர்கள் ஆத்தும வாழ்வை அறியாமல் இருக்கின்றனர்.

10. தேவனிடத்திலிருந்து ஆவிக்குரிய வாழ்வின் ஆசீர்வாதத்தை பெற விரும்பும் ஒருவர் விசுவாசித்து கீழ்படிய வேண்டும். சூம்பின கையுடைய ஒரு மனிதன் என்னிடம் வந்தபொழுது, அவனது கையை நீட்ட சொன்னபொழுது உடனே கீழ்ப்படிந்தான். அவனது கை மற்ற கைபோல முழுவதும் சுகமாயிற்று (மத்.12:10–13). ஒரு வேளை உடனே கீழ்ப்படியாமல் அவன் விவாதிக்க துவங்கி "எப்படி நான் என் கையை நீட்டமுடியும்? எனக்கு அதை செய்யமுடிந்தால் நான் ஏன் உம்மிடம் வரவேண்டும்? முதலில் என் கையை சுகமாக்குங்கள், அப்பொழுதுதான் எனக்கு அதனை நீட்டமுடியும்" என கூறியிருந்தால் அது சரியான காரணமாக தெரியலாம். ஆனால் அவனது கை சுகமடைந்திருக்காது.

ஜெபிக்கும் ஒருவன் விசுவாசமும் கீழ்ப்படிதலும் உளளவராக இருக்கவேண்டும். தனது பலவீனமான சூம்பிய கைகளை என்னிடத்தில் ஜெபத்தில் ஏறெடுத்து காட்டவேண்டும். நான் அவனுக்கு ஆவிக்குரிய வாழ்வை தந்தருளுவேன். அவனவனுக்குரிய தேவைக்குத்தக்கதாக அவனுக்கு தரப்படும் (மத்.21:22).

# 4

## ஊழியம்

### பகுதி 1

**சீடன்:** ஆண்டவரே, ஊழியம் என்பதற்கு உண்மை பொருள் என்ன? நாங்கள் சிருஷ்டிகருக்கு ஊழியம் செய்வதும் அவருக்காக அவருடைய சிருஷ்டிகளுக்கும் உதவுவது ஊழியமா? சாதாரண புழுவைப்போன்ற ஒரு மனிதனின் உதவி, உமது பெரிய குடும்பத்தை கவனிக்குமளவுக்கு ஏதாவது செய்ய இயலுமா? அல்லது தனது சிருஷ்டிகளை கவனிக்க மனிதனின் உதவி தேவைதானா?

**ஆண்டவர்:** ஊழியம் என்பது ஆவிக்குரிய வாழ்வின் செயல்பாடுகளாகும். அது அன்பினால் இயற்கையாக உந்தப்படுகின்றது. அன்பான தேவன் தமது சிருஷ்டிப்புகளை விசாரிக்கிறவர். அவரது வாஞ்சை தனது சாயலாக உருவாக்கப்பட்டுள்ள மனிதன் சோம்பலாயிராமல் செயல்பட வேண்டும் என்பதே. பூமண்டலத்தை காப்பதற்கு தேவனுக்கு யாருடைய உதவியும் தேவையில்லை. தேவனுடைய உதவியால் மட்டுமே அவை இயங்கும்படி சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. அவரே தமது சிருஷ்டிகளின் விருப்பத்தையும் நிறைவேற்றுவார். மற்றவர்களுக்கு உதவுவதில் மனிதருக்கு கிடைக்கும் பெரு நன்மை என்னவென்றால் அது உதவும் மனிதனுக்கே பலனை தருகின்றது. நீ தீபெத்தில் இருக்கும்பொழுது அவ்வாறு சம்பவித்தது. மிக அதிகமான குளிரினால் நீ பாதிக்கப் பட்டிருந்தபொழுது பனிக்கட்டியில் பாதி புதைந்து போய் மரணதருவாயிலிருந்த ஒருவனை கண்டாய். நீ அவனிடம் சென்று அவனை தூக்கி உன் தோள்களில் சுமந்து எடுத்து சென்றாய். நீ செய்த அந்த முயற்சிகள் உனது உடலில் வெப்பத்தை உண்டு பண்ணியதால் அது அவனது உடலிலும் வெப்பத்தை ஏற்படுத்தியதால் அவனும் நீயும் உயிர் பிழைத்தீர்கள். அவனைக் காப்பாற்றியதால் உனது உயிரும் காக்கப்பட்டது. இதுதான் ஊழியத்தின் உண்மையான முடிவு. மனிதன் மற்றவர்களுடைய உதவியின்றி

வாழுதல் இயலாது. ஒருவன் மற்ற மனிதனிடமிருந்து உதவிபெற்றும் தன்னால் இயன்ற அளவு மற்றவருக்கு உதவ மனமின்றி இருந்தால், நன்றியற்ற அம்மனிதனுக்கு மற்றவர் உதவியை எதிர்ப்பார்க்க இடமில்லை.

2. தேவன் தனக்கு தந்துள்ள வசதியாலும் பலத்தினாலும் மனிதருக்கு ஒருவன் ஊழியம்செய்யும் மட்டும் தேவன்தாமே தனக்கு அருளக்கூடிய நன்மையை பெறமுடியும். மனிதன் தனது பகுதியை செய்ததும் தேவன் தமது கிரியையை செய்து முடிப்பார். உதாரணமாக லாசருவின் கல்லறையை மூடியிருந்த கல்லை புரட்டிபோடுவது மனிதரின் வேலை, அதை செய்ய தேவன் தமது வல்லமையை பயன்படுத்த வேண்டுவதில்லை. ஆனால் மக்கள் அதனை உருட்டி தள்ளியபொழுது, தேவனாகிய நான் மனித பலத்தினால் செய்ய இயலாததை செய்தேன். நான் மரித்தவர்களுக்கு உயிர் தர இயலும். அதற்கு பின்பும் லாசருவை பிரேத சீலைகளிலிருந்து கட்டவிழ்த்து அவனை முற்றிலும் விடுதலையுடன் வெளியே வர செய்ய மனிதருடைய வேலை தேவையாக இருந்தது (யோவா.11:39,41,44).

பாவத்திலே மரித்திருப்போர் உயிர்பெற கல்லறையை மூடியுள்ள கல்லைப்போன்ற தடைகளையும் கஷ்டங்களையும் தள்ளிவிட எனது சீடர்கள் வேலை செய்ய வேண்டும். உயிரை அருளுவது எனது வேலை. சில வேளைகளில் சிலர் ஆவிக்குரிய வாழ்வை அடைந்தும் தங்கள் பழைய கெட்ட பழக்கங்களுக்கும் தீய சிநேகிதருக்கும் கட்டுப்பட்டிருப்பார்கள். அவர்களை பூரணமாக விடுதலை பெறச் செய்வதுதான் என் பிள்ளைகளுடைய கடமை. இந்த மகிமையான ஊழியத்தை செய்வதற்காக அவர்கள் ஆத்துமாவிலும் ஆவியிலும் எப்பொழுதும் ஆயத்தமாக விழித்திருக்கவேண்டும்.

3. ஒரு ராஜா மரணத்தருவாயில் இருக்கும்பொழுது தனக்கு உண்மையாயிருந்த ஒரு சேவகனிடம் இவ்வாறு கூறினார், “நான் ஒரு பிரயாணத்திற்கு புறப்படும்பொழுது உன்னை அந்த இடத்திற்கு முதலில் அனுப்பி எனது வருகையை அறிவித்து அங்கே ஆயத்தங்களை செய்வது வழக்கமாக இருந்தது. இப்பொழுது நான் மரித்தோர் இருக்கும் இடத்திற்கு செல்கிறேன், அங்கே போய் நான் சீக்கிரமாக அவர்களிடத்தில் வரப்போகிறேன் என்று அறிவித்து விடு. இதைக்கேட்டதும் முதலில் அந்த உண்மையுள்ள சேவகனுக்கு அதன் பொருள் விளங்கவில்லை. ஆனால் உடனே அதன் பொருளை விளங்கிக்கொண்டான். தான் முதலில் மரித்து அந்த ராஜாவருமுன் மரித்தோர் இடத்தில் இருக்கவேண்டும் என உணர்ந்து,

தயங்காமல் தன் இருதயத்தில் வாளால் குத்தி மரித்துவிட்டான். எனக்கு ஊழியம் செய்பவர்களுடைய கடமையும் அப்படியே; ஜீவனின் அதிபதியும் இராஜாதி ராஜாவுமானவருடைய (அப்.3:15; வெளி.19:16). இரட்சிப்பின் சுவிசேஷத்தை பாவத்தில் மரித்துள்ள மனிதருக்கு எடுத்துச் செல்வதற்காக தங்கள் உயிரையும் எனக்காக விட்டுவிட ஆயத்தமாக இருக்கவேண்டும், நான் அவர்கள் இரட்சிப்படைய உலகில் வந்தேன், மறுபடியும் வரப்போகின்றேன்" (வெளி.2:10).

4. ஒரு முரட்டாட்டமுள்ள மகன் தன் தகப்பனுடைய வீட்டை விட்டு சென்று கொள்ளையர்கள் கூட்டத்தில் சேர்ந்துவிட்டான், அவர்களைப் போலவே துணிகரமும் கொடுமையும் உள்ளவனாகிவிட்டான். அந்த தகப்பன் தனது ஊழியரை அழைத்து தன் மகனிடம் போய் அவன் மனந்திரும்பி வீட்டுக்கு வந்துவிட்டால் அவனுக்கு மன்னிப்பு கிடைக்கும், வீட்டிலே ஏற்றுக்கொள்ளப்படுவான் என அறிவிக்கும்படி கூறினான். ஆனால் அவர்கள் அந்த பயங்கரமான கொள்ளையர்கள் இருக்கும் அடர்ந்த காட்டுக்குள் போக பயந்து மறுத்துவிட்டனர். அப்பொழுது அந்த மகனின் மூத்த சகோதரன், தந்தையைப்போல அவனை நேசித்ததால் தானே மன்னிப்பின் செய்தியை சொல்லவிரும்பி அங்கே தேடி சென்றான். அவன் அந்த காட்டிற்குள் நுழைந்தவுடன் கொள்ளையர் கூட்டத்தினர் வந்து அவனை அடித்து காயப்படுத்திவிட்டனர். அவனது இளைய சகோதரனும் அவர்களில் ஒருவனாக இருந்தான். அவன் தன் அண்ணனை அடையாளம் கண்டதும் மிகுந்த துயரமும் வேதனையும் அடைந்தான். அந்த மூத்த சகோதரன் கஷ்டத்துடன் மன்னிப்பின் செய்தியை அறிவித்துவிட்டான். தனது வாழ்வின் நோக்கம் நிறைவேறியது. அன்பின் கடமை முடிந்தது எனக்கூறி உயிரிழந்து விட்டான். மூத்த சகோதரனின் தியாகமான பலி அந்த முரட்டு இளைஞன் மனதில் ஆழமான உள்ளுணர்வை ஏற்படுத்தியது. அவன் தன் தகப்பனிடம் மனந்திரும்பி சென்று அந்த நாளிலிருந்து ஒரு புது வாழ்வை துவங்கினான். இவ்வாறே எனது பிள்ளைகளும் கிருபையின் செய்தியை பாவத்தில் அழிந்து வழி தவறியிருக்கும் தங்கள் சகோதரருக்கு எடுத்துச்செல்ல தங்கள் உயிரை தியாகம் செய்யவும் ஆயத்தமாக இருக்கவேண்டும். நானும் இரட்சிப்பு அனைவருக்கும் கிடைப்பதற்காக எனது ஜீவனை அளித்தேன்.

5. எனது பிள்ளைகள் இவ்வுலகிற்கு உப்பைப்போன்றவர்கள் (மத்.5:13).

உப்பானது கரைந்து போகவில்லையென்றால் தனது சுவையை அளிக்கஇயலாது. அதைபோலவே எனது பிள்ளைகளும் பரிசுத்த ஆவியானவராலும், அன்பின் நெருப்பினாலும் கரைந்து தியாக பலிகளாக வாழவில்லையெனில் ஒரு ஆத்துமாவையும் ஆவிக்குரிய பரலோக வாழ்விற்கு கொண்டு வரமுடியாது. அவர்கள் உப்புத்தூணாக ஆகிவிட்ட லோத்தின் மனைவியை ஒத்தவர்கள் (ஆதி.19:26). ஆனால், உங்களுக்காக நான் கெத்செமெனேயில் உருகி (லூக்.22:44). சிலுவையில் அநேகரை மீட்பதற்காக என் ஜீவனை தந்தேன். ஜீவனுக்கு பதிலாக ஜீவன் தரப்படவேண்டும். அதைப்போன்றே நீங்களும் ஆவிக்குரிய வாழ்வை மற்றவர்களுக்கு தந்து அவர்களை மரணத்திலிருந்து காப்பாற்ற உங்கள் ஜீவனையும் தருவதற்காகவே அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள்.

6. கொலைக் குற்றவாளி ஒருவன், தூக்கு தண்டனைக்கு உட்படாமல் அந்த நாட்டு ராஜாவின் யுத்தத்திற்கு அனுப்பப்பட்டான். அங்கே அவன் மிகவும் வீரமாக எதிர்த்து பேர் புரிந்தான், மிக அதிகமாக காயமடைந்தாலும் வெற்றி பெற்றவனாக திரும்பி வந்தான். அந்த வெற்றிக்கு பிறகு அவன் மறுபடியும் நியாயஸ்தலத்திற்கு தண்டனைக்காக கொண்டு வரப்பட்டான். ராஜா அவனது உடலிலிருந்து ஆழமான காயங்களை கண்டபொழுது மரண தண்டனையை விதிக்காமல் அவன் குற்றத்தை மன்னித்து விட்டார். மேலும் அவனுக்கு வெகுமதி அளித்து உயர்ந்த பதவியும் அளித்தார். அவ்வாறே எனது பக்கமாக சேர்ந்து இந்த பரிசுத்த போரில் ஈடுபட்டு சாத்தானுக்கு எதிர்த்து நின்று வீரத்துடனும் தைரியமாகவும் போரிட்டு தங்கள் சகோதர சகோதரிகளை மீட்டுக்கொள்ள முயற்றிப்பவர்கள் பாவ மன்னிப்பை மட்டுமல்ல, தேவனுடைய ராஜ்யத்திலே கிரீடமும் ஆளுகையும் பெற அருள் செய்வேன்.

7. சுத்தமான தண்ணீர் செல்லும் குழாய் எப்படி அந்த தண்ணீர் தனக்குள் கடந்து செல்வதனால் எப்பொழுதும் தூய்மையாக இருக்கிறதோ, அதைப்போலவே பரிசுத்த ஆவியானவரால் ஜீவதண்ணீரை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்பவர் தூய்மையாக்கப்பட்டு தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள்.

8. பரம அழைப்பிற்கு உடனே கீழ்ப்படிவதே பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளவும் ஊழியத்தில் பிரவேசிக்கவும் ஒரு விசுவாசிக்கு சிறந்த வழியாகும். நன்கு நீச்சல் அடிப்பவராக ஆக ஒருவர் வெளியே இருந்து

விதிமுறைகளை கற்றுக்கொள்வது போதாது. தண்ணீரில் குதித்து முதலில் ஆழமில்லாத இடங்களிலும் பின்பு அதிக ஆழங்களிலும் நீச்சல் அடித்து பழகுவதால் மட்டுமே அதில் தேர்ச்சி அடைய இயலும். பாவத்தின் ஆழ்ந்த தண்ணீர் போன்ற நிலையில் மூழ்கும் ஆத்துமாக்களை மீட்க சிறந்த வழியான தெய்வீக கல்வியை நடைமுறையில் கற்க என்னுடன் கூட எப்பொழுதும் இருந்து ஐக்கியம் கொள்ளவேண்டும் (அப்.4:13).

**9.** சிலர் தங்களிடம் திறமை இல்லை என்று கருதி ஊழியம் செய்ய இயலாமல் தயங்குகின்றனர். "பலவீனத்தில் என் பலன் பூரணமாக விளங்கும்" (2 கொரி.12:9) என்ற வாக்கை அவர்கள் நினைவு கூருவதில்லை. அவர்கள் சில வியாதி நீங்கிய பின்பு நல்ல உணவு உட்கொண்டும் சரியான உடற்பயிற்சியும் வேலையும் செய்யாததால் பலவீனமாகவே உள்ள மக்களை போன்றவர்கள். அந்த விதமான விசுவாசிகள் தங்கள் நம்பிக்கையை என்மேல் வைத்து அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களை மீட்கும்பணியில் உடனே செய்ய வேண்டும்.

## பகுதி 2

**1.** நீங்கள் எனது சீடர்களென்றும் சத்தியத்தை உண்மையாக அறிந்தவர்களென்றும் கண்டுகொள்ள அன்புதான் உரைகல் (யோவா.13:35). நான் நீதியின் பட்டயத்தையும் சில வேளைகளில் பயன்படுத்துகிறேன். முதலில் பார்க்கும்பொழுது அது இரக்கமற்ற செயல்படுவதுபோல தோன்றும், சாலமோனைப்போல இரக்கமற்று எனது பணியை நிறைவேற்றுவதுபோல காணப்படும் (1 இரா.3:16–28). ஆனால் சத்தியத்தை வெளிப்படுத்தும் அன்பாகிய உரைகல்லை உபயோகித்து நீங்கள் அன்பான தேவனுடைய பிள்ளைகள், உங்களுக்காக அவர் தன்னை தியாகமாக கொடுத்தார் என்பதை காட்டுகிறேன். அதனால் நீங்கள் அந்த அன்பில் நிலை கொண்டிருந்து நான் செய்ததுபோல நீங்களும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். அப்பொழுது நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள் (யோவா.14:19).

**2.** நீங்கள் என்னுடைய சீடர்களாக இருந்தால் உண்மையிலேயே உங்கள் அன்பின் ஊழியம் மிகுந்த கனிகளைத் தரும் (யோவா.15:8). மனிதர்

உங்களை நிந்தித்து பலவித தீமையானவற்றை சொல்வார்களானால் அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களை நிந்திக்காமல் உங்கள் அன்பின் கனியை ருசிபார்க்கும்படி செய்யுங்கள்.

3. குறும்புக்கார சிறுவர்கள் ஒரு பழமரத்தைக் கண்டால், அதன் மேல் கற்களை எறிவார்கள். அந்த மரமும் முறுமுறுப்பின்றி அவர்களுக்கு கற்களையல்ல, தன் அருமையான கனிகளை தருகின்றது. அதை எதிர்பேசாமல் தருகின்றது. தீமையை சந்திக்கும்பொழுது சோர்ந்து போகவேண்டாம். மனிதர் உங்களை நிந்திப்பதுதான் உங்கள் வாழ்க்கை மிகுந்த கனிகளை தருவதாக உள்ளது என்பதை நிருபணம் செய்கிறது. அவர்கள் பொறாமையினாலும் மிகுந்த வெறுப்பினாலும் உங்களை இவ்வாறு நடத்தினாலும் அதனால் உங்கள் பரமபிதாவின் மகிமை அதனால் வெளிப்படும். கர்த்தர் மகிமைப்பட விரும்புகிறார் அல்லது அவரது மகிமைக்கு குறைவுள்ளது என எண்ணவேண்டாம். ஒருபோதும் அப்படியல்ல! அவருடைய அன்பின் கிரியை என்னவென்றால் மனிதனை அவன் விழுந்துவிட்ட ப்ாவ நிலையிலிருந்து தூக்கி எடுத்து அவனைதமது ப்ரலோக மகிமைக்கு உயர்த்துவதே! மனிதனை கழுவி தூய்மைபடுத்தி உயர்த்துவதனால் அவர் தமது அற்புதமான தெய்வீக அன்பு காணப்படுகின்றது.

3. தங்களது ஊழியத்தினால் அநேகரை பாவத்திலிருந்து திரும்பி என்னுடைய நீதியை கண்டடைய செய்பவர்களுக்கு முதலில் நட்சத்திரங்களைப் போல் பிரகாசிக்கும் மகிமையை அளிப்பேன். பின்பு அவர்கள் பூரணபடுத்தப்பட்டு தங்கள் பிதாவின் இராஜ்யத்தில் சூரியனைப்போல பிரகாசிப்பார்கள். நீதியின் சூரியன் உதிக்கையில் நட்சத்திரங்கள் மங்கலாகி மறைந்து விடும். ஆனால் எனது பிதா தமது குமாரரும் அவைரப்போல பூரணராகி நித்தியமகிமையில் அவருடன் பிரகாசிக்க வேண்டும் என விரும்புகிறார். அவரது அளவற்ற நித்திய அன்பில் அவர்களும் களிகூர விரும்புகின்றார்.

4. மனிதனைவிட மிகச் சிறியதாக உள்ள சிருஷ்டிகள், மின்மினி பூச்சி, மற்றும் இமயமலையிலுள்ள சில செடிகள் தங்களிலுள்ள மங்கலான வெளிச்சத்தால் தாங்கள் இருக்கும் இருண்ட காட்டில் ஒளியைக் காட்டுகின்றன.

கடலின் மிகுந்த ஆழங்களில் வாழும் சில சிறிய மீன்கள் பளிச்சிடும் வெளிச்சத்தை காட்டுகின்றன. அவை மற்ற மீன்களுக்கும் வழிகாட்டி சத்துருக்களை காட்டி அவற்றிற்கு தப்பிச்செல்ல உதவுகின்றன. அப்படியானால் எனது பிள்ளைகள் எவ்வளவு அதிகமான வெளிச்சங்களாக இவ்வுலகில் வாழவேண்டும் (மத்.5:14). உண்மை வழியைக்காட்ட தங்களை தியாகம் செய்ய ஆவலாக இருக்கவேண்டும். தேவனால் தங்களுக்கு தரப்பட்டுள்ள வெளிச்சத்தால் சாத்தானின் இரையாக விடுக்கும் இருளில் உள்ள மக்களுக்கு ஒளி காட்ட வேண்டும்.

5. பரலோகத்திலிருந்து அளிக்கப்பட்டுள்ள வல்லமைகளை ஊழியத்தை பயன்படுத்தாமல் இருப்பவர்கள் அந்த பரம ஈவுகளை இழந்து போகும் அபாயத்தில் இருக்கின்றார்கள். ஆழ்ந்த தண்ணீர்களில் உள்ள இருண்ட குகைகளில் வாழும் சில மீன்களுக்கும், திபேத் நாட்டிலுள்ள சில சாதுக்களுக்கும் இது சம்பவித்தது. மிக அதிக காலமாக இருளிலேயே வாழ்ந்ததால் கண்பார்வை அற்றுபோனது. தீக்கோழியும் தனது சிறகுகளை பயன்படுத்தாமல் இருந்ததால் பறக்கும் சக்தியை இழந்துவிட்டது. அதனால் எச்சரிக்கையாக இருங்கள். உங்களுக்கு அளிக்கப்பட்ட வரங்களையும் தாலந்துகளையும் பயன்படுத்துங்கள். அவற்றை பயன்படுத்துவதனால் உங்கள் எஜமானுடைய சந்தோஷத்திலும் மகிமையிலும் பங்குபெறுவீர்கள் (மத்.25:14–30).

6. சில வேளைகளில் ஊழியத்தில் மகத்தான கிரியை ஒன்றை நடப்பிக்க, எனது நோக்கத்தை நிறைவேற்ற உலகத்தின் கண்களில் மிக சிறுமையாய் காணப்படும் ஒருவரை தெரிந்தெடுக்கிறேன். ஏனெனில் தங்கள் பலனையும் அறிவையும்பற்றி பெருமை பாராட்டாமல் தங்கள் முழு நம்பிக்கையையும் என்மேல் வைத்து சார்ந்திருப்பார்கள். தங்களுடைய சிறு திறனையும் பெரிதாக கருதமாட்டார்கள். தங்களுடைய எல்லாவற்றையும் எனது பணிக்கென அர்ப்பணியார்கள் (1 கொரி.1:26–30). எடுத்துக்காட்டாக, நான் வனாந்தரமான இடத்தில் ஐந்தாயிரம் பேர்களுக்கு ஐந்து அப்பம், இரண்டு மீன்களினால் போஷித்தபொழுது, அந்த அற்புதத்தை எனது சீடர் குழுவின் உதவியால் செய்யவில்லை என்பதை நீங்கள் நினைவு கூரலாம். அவர்கள் சந்தேகத்தால் நிறைந்து, என்ன செய்வதென கலங்கி அந்த திரளான மக்களை பசியுடன் அனுப்பிவிட நினைத்தார்கள் (யோவா.6:9). அந்த அற்புதத்திற்கு உதவிய ஊழியன் ஒரு சிறுவன். நரம்பு வியாதியிலிருந்து

அவனை நான் சுகப்படுத்தியிருந்தேன். எனது வார்த்தைகளை கேட்கவேண்டுமென்ற ஆசையால் அவன் என்னை பின்தொடர்ந்து வந்தான். அவனது ஏழைத் தாயார் அவனுக்கு உடைகளையும் சில வாற்கோதுமை அப்பங்களையும் மீன்களையும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு போதுமானதாக இருக்கும்படி பயணத்திற்கு உதவும்படி அனுப்பியிருந்தாள். உணவு யாரிடத்திலாகிலும் உண்டா என கேட்கப்பட்டபொழுது இந்த உண்மையுள்ள சிறுவன் தன்னிடமிருந்த எல்லாவற்றையும் கொண்டுவந்து சீடர்களினிடம் அளித்தான். அங்கே அநேக செல்வந்தர்களான மக்களிடம் நிறைய நல்ல உணவுகள்; கோதுமை அப்பம் ஆகியவை இருந்தன. ஆனால் அவற்றை அளிக்க அவர்கள் முன்வரவில்லை. அதனால் அந்த சிறுவனுடைய வாற்கோதுமை அப்பங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு பெருங்கூட்டமான மக்களை போஷிக்க பயன்படுத்தப்பட்டன.

7. சிலர் நன்றியறிதலுடன் இருப்பதில் குறைவு பட்டுள்ளனர். அவர்கள்மேல் எப்பேர்பட்ட ஆசீர்வாதங்கள் அருளப்பட்டு அவர்கள் நன்மைக்காக அற்புதங்களும் நடந்திருந்தாலும் அவர்கள் திருப்தியற்றும் நன்றியற்றும் உள்ளனர். அவர்களை மற்றவர்களுடைய ஆசீர்வாதத்திற்கென ஊழியத்தில் பயன்படுத்த முடியாது. அவர்கள் அந்த 38 வருடங்கள் சுகமாக்கப்படமுடியாத வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த மனிதனைப் போன்றவர்கள். அவன் நன்றியில்லாமலும் என்னை விசுவாசியாமலும் எனது பெயரை நினைவுகூருவும் இயலாதவனாக இருந்தான் (யோவா.5:12–13). அவ்விதமான மனிதர்களிடமிருந்து உலகிற்கு எந்த ஆசீர்வாதமும் இல்லை. தனக்குள்ள எல்லாவற்றையும் தன் ஜீவனுக்குள்ளதையும் கொடுத்துவிட்ட அந்த விதவையைப் போல இழக்க மனதுள்ளவர்களால் மட்டுமே ஆசீர்வாதம் வர இயலும் (லூக்.21:2–4).

8. உண்மையான ஊழியத்தை செய்யவும் கடமையை நிறைவேற்றவும் எனது ஊழியர்கள் தங்கள் உயிரையும் தர ஆயத்தமாக இருக்க வேண்டும். ஒரு பனி படர்ந்த இடத்தில் காவலில் நின்ற உண்மையான போர் வீரன் கடுமையான குளிரிலும் பனித்தூறலிலும் தனது இடத்தில் உறுதியாக நின்று உறைந்ததால் மரித்துபோய் ஒரு சிலைபோல ஆகியும் தன் இடத்தில் நின்றான். காவலிலிருந்த மற்றவர்கள் நெருப்பில் அனல்பெற சென்று விட்டனர். இராஜா வந்தபொழுது தன் இடத்தில் நின்று மரணபரியந்தம் உண்மையாக இருந்த அவனைக் கண்டபொழுது தனது கிரீடத்தை எடுத்து

அவன் தலையில் சில நிமிடங்கள் வைத்து, "இவ்வளவு உண்மையான வீரன், எனது கனத்திற்கும் மகிமைக்கும் உரிய இடத்திற்கு பாத்திரவான். அவன் பிழைத்திருந்தால் எனது இராஜ்யத்திற்கு தலைவனாக உயர்த்தியிருப்பேன்!" எனக் கூறினார். இவ்விதமாகவே எனது ஊழியர்கள் உண்மையும் உத்தமமுமாயிருக்க அவர்களை நியமித்திருக்கிறேன். இவ்விதமாக விசுவாசத்துடனும் வீரத்துடனும் தம் வேலையை முடிப்பவர்களுக்கு வாடாத நித்திய கிரீடத்தை தருவேன் (2 தீமோ.4:4,5,8).

9. அநேகர் ஊழியத்திற்காக தரப்பட்ட விலையேறப்பெற்ற நேரத்தை வீணாக்கியதுண்டு. ஆனால் இப்பொழுதும் அவர்கள் எழும்பி தங்கள் எஞ்சிய நாட்களை சிறந்தவிதமாக உபயோகிக்க அவர்களுக்கு சந்தர்ப்பத்தை அளிக்கிறேன். வேட்டையாடும் ஒருவன் காட்டில் கடந்து செல்கையில் ஒரு அருவியின் கரையில் வண்ண மயமான கற்களை கண்டெடுத்தான். அவற்றின் மதிப்பை அறியாமல் ஒவ்வொன்றாக தனது கவண்கல்லாக பயன்படுத்தி அருவிக் கரையில் இருந்த மரங்களிலுள்ள பறவைகளை வீழ்த்தினான். ஒவ்வொன்றாக அவை தண்ணீரில் விழுந்து விட்டன. தனது கையில் ஒன்றைமட்டும் எடுத்துக்கொண்டு ஊருக்குள் திரும்பிவந்து கடைத்தெரு வழியாக நடந்து செல்கையில் ஒரு நகைக் கடைக்காரன் அதைப் பார்த்து "இது விலையேறப்பட்ட வைரக்கல், இதற்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கிடைக்கும்" என்றான். வேடன் அதை கேட்டபொழுது "ஐயோ, அதன் மதிப்பை அறியாமல் பறவைகளை வேட்டையாட பயன்படுத்தினேனே, அவை நதிக்குள் விழுந்துவிட்டதே இல்லையெனின் நான் கோடீஸ்வரனாக ஆகியிருப்பேன், இருந்தும் இப்பொழுது என் கரத்தில் இருக்கும் ஒன்றை அரியதாக பெற்றேன்" என்றான். ஒவ்வொரு நாளும் ஒரு விலைபெற்ற வைரம் போன்றது. ஒரு வேளை அதிக நாட்களை மறைந்து போகும் உலக இன்பங்களுக்காக வீணாக்கப்பட்டாலும் எஞ்சியுள்ள வாழ்நாளின் மதிப்பை அறிந்து நீங்கள் விழித்திருக்கவேண்டும். ஆவிக்குரிய வகையில் சிறந்ததாக அதனை பயன்படுத்துங்கள். எனது ஊழியத்தில் பயன்படுத்துவதால் அநேகரை பாவத்தினின்றும் மரணத்தினின்றும் இரட்சித்து நீங்கள் நித்திய மகிமையான வெகுமதியை பெறுவீர்கள்.

# 5

# சிலுவையும் துன்பம் அனுபவிப்பதின் இரகசியமும்

## பகுதி 1

**சீடன்:** சிலுவை என்பதன் பொருளும் நோக்கமும் என்ன?

உலகில் வேதனைகளும் துன்பங்களும் தொடர்ந்து காணப்படுவது ஏன்?

**ஆண்டவர்:** சிலுவைதான் பரலோகத்தின் திறவுகோல். நான் ஞானஸ்நானம் பெற்ற நேரத்தில் பாவிகளுக்காக சிலுவையை என் தோளின்மேல் எடுத்துக்கொண்டேன். பரலோகம் திறக்கப்பட்டது. எனது முப்பது மூன்று வருடம் சிலுவையை சுமந்த வாழ்க்கையினாலும் மரணத்தினாலும் பரலோகம் திறக்கப்பட்டது. அதுவரை பாவத்தின் காரணத்தினால் மூடப்பட்டிருந்தது, விசுவாசிகளுக்காக என்றென்றும் திறந்து விட்டது.

விசுவாசிகள் தங்கள் சிலுவையை எடுத்து என்னை பின்பற்றும்பொழுது என் மூலமாக பரலோகில் பிரவேசிப்பார்கள் (யோவா.10:9). உலகத்தால் விளங்கிக்கொள்ள முடியாத ஆனந்தத்தை அனுபவிப்பார்கள். அவிசுவாசத்திற்கு பரலோகம் அடைக்கப்பட்டுள்ளது. நம்பிக்கையும் அனுபவமும் அவிசுவாசிக்கு மகிழ்ச்சியானது துயரத்துக்கு பின் வரும் என போதிக்கும். ஆனால் அந்த மகிழ்வு நிலைத்திராது. ஆனால் நான் எனது பிள்ளைகளுக்கு வேதனையில் ஆறுதல் அளிக்கிறேன். பூரண சமாதானமும் மகிழ்ச்சியும் அவர்களுக்கு அருளுகின்றேன். மகிழ்ச்சியுடன் எனது சிலுவையை எடுத்து சுமப்பவர்கள் அதனால் தாங்கப்படுவார்கள். எப்பொழுதும் அந்த சிலுவையின் ஆதரவுடன் இறுதியில் பரலோகில் பிரவேசிப்பார்கள்.

2. மனிதனின் துணிந்து பாவம் செய்யும் முரட்டாட்டமான சுபாவமே வேதனையை உருவாக்குகின்றது. வெப்ப சூழல் உள்ள நாட்டின் சூடான நிலைமை குளிர்பிராந்தியத்தில் வாழும் மக்களுக்கு எரிச்சலையும்

வேதனையும் தருகிறது. கடுமையான குளிர் வெப்பநிலை அதிகமுள்ள நாட்டில் வாழும் மக்களுக்கு கஷ்டத்தை தருகிறது. வெப்பமும் குளிர் நிலையும் சூரியனுடன் பூமிக்கு உள்ள உறவை பொறுத்தது. மனிதன் தன் சுயசித்தத்தினால் தேவனுடன் உறவு கொள்கிறான். அல்லது அவரை ஏற்றுக் கொள்வதில்லை. தேவனுடைய நியாயமான வழிகள் மனிதனின் ஆவிக்குரிய நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் ஏதுவானவைகள். மனிதன் அவற்றை எதிர்த்து செல்வதே ஆவிக்குரிய வேதனையையும் துயரத்தையும் தருகின்றது. தேவன் தமது சித்தத்துக்கு விரோதமாக செயல்படும் மனிதனின் நிலைமையை நல்வழிப்படுத்த உலகமானது மனிதனுக்கு நித்திய வீடு அல்ல என்பதை தெளிவுபடுத்துகிறார். உலகம் அவன் விட்டு செல்லவேண்டிய அயல்நாடுதான் (2 கொரி.5:1,2,6).

இந்த உலகம் மனிதனை பூரணமான நித்திய வீட்டிற்கு ஆயத்தப்படுத்துகிறது. அடிக்கடி விழும் அடிகளும் துன்பமும் அவனது ஆவியை விழிப்படைய செய்கிறது. அல்லது கவனம் இழந்து உண்மை வழியினின்று விலகி நிலையற்ற உலகில் தவறிவிழ நேரிடும். மனிதன் தன்னை உருவாக்கின தேவனுடன் ஐக்கியமாக வாழவேண்டும். விரைவாக பறந்து போகிற இவ்வாழ்வின் துன்பம், துயரத்திலிருந்து விடுபட்டு நித்திய மகிழ்வும் சமாதானமும் உள்ள பரலோகில் பிரவேசிக்க வேண்டும்.

3. வலியும் வேதனையும் விஷம் போல கசப்பாக உள்ளது. ஆனால் சில வேளைகளில் விஷத்திற்கு மாற்று மருந்தாக தரப்படுவது ஒரு விஷம்தான். அதைப்போல எனது விசுவாசிகளுக்கு வேதனையும் துன்பமும் ஆவிக்குரிய வாழ்வின் சுகத்துக்கும் பலனுக்கும் ஏதுவான கசப்பான மருந்துகளாக செயல்படுகின்றன. அவர்கள் முழுமையான நலம் பெற்றதும் எல்லாத் துன்பத்துக்கும் முடிவு வரும். அவர்களுடைய வேதனை எனக்கு மகிழ்வை தருவதில்லை. எனது நோக்கம் அவர்கள் நித்தியமான நன்மையை பெறுவதே (புலம்.3:31,33).

4. பூமியதிர்ச்சியினால் வரும் தாக்குதலால் சிலவேளைகளில் பாலைவனமான பகுதிகளிலிருந்து இனிய தண்ணீர் ஊற்றுகள் வெளிப்படும். ஆனால் ஒன்றுமே விளையாமல் வறண்டதாக இருந்த நிலங்கள் நீர்பாசன வசதிபெற்று அருமையான பலன் தருவதாக மாறும். அதைப்போன்றே சில அதிர்ச்சி தரும் நிகழ்ச்சிகளால் துன்பங்களினால் மனிதனின் இதயத்திலிருந்து மறைந்த ஊற்றுகள் வெளிவரும், முறுமுறுத்தலும் குறை

கூறுதல்களும் காணப்பட்ட இடத்தில் நன்றியறிதலும் ஆனந்தமும் நீரூற்றுபோல எழும்பும் (சங்.119:67,71).

5. ஒரு குழந்தை இவ்வுலகில் பிறந்தலும் அது சத்தமிட்டு அழவும் கத்தவும் வேண்டும். அது மிகவும் தேவை. அதனால் அது மூச்சு விடவும் அதன் நுரையீரர்கள் முழுமையாக இயங்கவும் ஏதுவாகின்றது. ஒரு வேளை குழந்தை ஏதாவதொரு காரணத்ததால் அழவில்லையென்றால் அதை லேசாக கையால் தட்டி அடித்து அழும்படி செய்வார்கள். அது பூரணமான அன்பினால்தான். சில வேளைகளில் நானும் எனது பிள்ளைகளை அடித்து அந்த வலியினாலும் வேதனையினாலும் ஜெபமாகிய மூச்சு அவர்கள் ஆவிக்குரிய நுரையீரல்களில் எழும்பவும் அதனால் அவர்கள் புதிய பலன் பெற்று நித்திய வாழ்வில் நிலைத்திருக்கும்படியும் செய்கின்றேன்.

6. மேலுள்ள ஓடு கசப்பாகவும் உள்ளேயிருக்கும் பருப்பு மிகசுவையானதும் பலமளிப்பதுமானதாக இருக்கின்றது. இதைப் போன்றே சிலுவையின் வெளித்தோற்றம் கவர்ச்சிகரமானதாக இல்லை. ஆனால் சிலுவையை சுமப்பவருக்கு அதன் உண்மையான தன்மை வெளியாகின்றது. மேலான இனிமையான சமாதானத்தை அளிப்பதாக இருக்கின்றது.

7. நான் உலகில் அவதரித்தபொழுது, மனிதருடைய இரட்சிப்புக்காக அந்த கொடூரமான சிலுவையை அந்த ஆறுமணி நேரம் மட்டுமல்ல, அல்லது எனது ஊழியத்தின் மூன்றரை ஆண்டுகள் மட்டுமல்ல. எனது வாழ்வின் முப்பத்துமூன்றரை வருடங்களுக்கு சுமந்திருந்தேன். மனிதன் மரணமாகிய கசப்பிசிலிருந்து விடுதலையாகும்படி அப்படி செய்தேன். தூய்மையான மனிதன் ஒருவனுக்கு அழுக்கடைந்த ஒரு இடத்தில் சில நிமிடங்கள் நிற்பதும் மிகவும் வேதனையை தரும். அதுபோல என்னில் நிலைத்திருப்பவர்களுக்கு தீமையான மனிதா் மத்தியில் வாழ்வது மிகவும் கடினமான அனுபவமாக இருக்கும் அதனால்தான் ஜெப வாஞ்சையுள்ள சில மனிதர்கள் தீமையான பாவசூழலில் வாழ்வதில் மனமடிந்து போய் பாலைவனங்களிலும் குகைகளிலும் சாதுக்களைப் போல தனிமையில் வாழ விரும்பி சென்று விடுகின்றனர். இதை சிந்தித்துப் பாருங்கள். முன்பு பாவிகளாயிருந்த மனிதர்களுக்கே தங்கள் பாவ மனித சமுதாயத்தின் ஐக்கியத்தில் விருப்பமின்றி அவர்களை விட்டு பிரிந்து சென்று ஒரு நாளும் திரும்பிவர மனதில்லாமல் இருக்கும்பொழுது எனக்கு அது எவ்வளவு கடுமையான சிலுவையாக இருந்திருக்கவேண்டும்? பரிசுத்தத்தின் ஊற்றாகிய நான்

பாவக்கறையுள்ள மனிதர் மத்தியில் முப்பத்து மூன்றரை வருடங்களுக்கு வாழந்திருந்தேன். இதனை சரியாக புரிந்துகொள்வதும் பாராட்டுவதும் மனித சிந்தனைதிறனுக்கு அப்பாற்பட்டது. தேவதூதர்களும் இதனை உற்றுப்பார்க்க ஆவலாயிருந்தார்கள் (1 பேது.1:12). உலகத்தோற்றத்துக்கு முன்பே அவர்கள் தேவன் அன்பானவர் என அறிந்திருந்தார்கள். ஆனாலும் தேவனுடைய அன்பு அவ்வளவு அற்புதமும் அதிசயமானது. பாவிகளான சிருஷ்டிகளை தம்முடைய நித்திய வாழ்வில் சேர்த்துக்கொள்ள அவர் மனிதனாக பிறந்து கொடிய சிலுவை சுமக்க முனைந்த அளவு பெரியது.

8. என்னில் நிலைத்திருந்து என்னுடைய பணியில் சிலுவையை சுமப்பவரது பாடுகளில் நான் பங்கு பெறுகிறேன் (அப்.9:4). அவர்கள் சிருஷ்டிகள். நான் அவர்களது சிருஷ்டிகர், சரீரத்திலும் ஆவியிலும் நாங்கள்தனிப்பட்டவர்கள். ஆனால் சரீரத்தின் சிறிய பாகத்தின் வலியை ஆவி உணர்ந்து கொள்கிறது. அதுபோல நான் ஆவியாயும் ஜீவனாகவும் என் பிள்ளைகளுக்கு இருப்பதால் அவர்கள் என் சரீரமும் அவயவவுமாக இருப்பதால் நான் அவர்கள் வேதனையையும் துயரத்தையும் அறிந்துகொள்கிறேன். ஏற்ற நேரத்தில் விடுதலை தருகின்றேன்.

9. நான் சிலுவையை சுமந்ததால் சிலுவை சுமப்பவர்கள் அக்கினி போன்ற துன்புறுத்தல்கள் மத்தியில் அவர்கள் நடந்தாலும் நான் அவர்களை காத்து வழிநடத்த வல்லவராக இருக்கிறேன். நேபுகாத்நேச்சாரின் அக்கினி சூளையில் நின்ற அந்த மூன்று வாலிபருடன் நானும் இருந்தேன். கொழுந்து விட்டெரிந்த தீயினால் அவர்கள் மேல் பற்றி எரிய முடியவில்லை (தானி.23:5; 1 பேது.4:12–13). அதனால் பரிசுத்த ஆவியானவரின் முழுமையான புதுவாழ்வை பெற்றவர்கள் எந்த வித தீயையும் எரியும் தீ போன்றவற்றையும் மேற்கொள்வார்கள். என்னில் நிலைத்திருப்பதால் நித்திய சமாதானத்தையும் பாதுகாப்பையும் பெறுவார்கள்.

## பகுதி 2

1. கடுமையான குளிர்காலத்தில் மரங்கள் இலைகளின்றி நிற்கின்றன. அது உயிரற்று போனதுபோல காணப்படுகின்றது. ஆனால் வசந்த காலம் வரும்பொழுது புது துளிர் இலைகளும், அழகிய மலர்களும் பழங்களும்

தோன்ற ஆரம்பிக்கின்றன. அதைப்போலவே எனது சிலுவை மரணமும் உயிர்த்தெழுதலும், அதைப்போலவே உண்மையாக எனது சிலுவையை சுமப்பவர்களுக்கும் சம்பவிக்கும் (2 கொரி.4:8–11; 6:4–10). தங்கள் சிலுவையின் அடியில் நசுங்கி மரித்துவிட்டதுபோல காணப்பட்டாலும் அவர்கள் அழகிய மலர்களையும் நித்திய ஜீவனுக்கான மகிமையான கனிகளையும் தருவார்கள்.

2. ஒரு இனிமையான மரத்தை கசப்பான ஒன்றுடன் ஒட்டுப்போடும்பொழுது இரண்டின் மேலும் கத்தி படுகின்றது. அவைகள் இரண்டுமே பாடுபட அழைக்கப்பட்டுள்ளன. கசப்பான மரம் இனிமையான கனியை இவ்விதமாக தர முடிகிறது. அவ்வாறே மனிதனுடைய இயற்கையான கெட்ட சுபாவத்தில் நன்மையை உருவாக்க முதலில் நானும் பின்பு விசுவாசிகளும் கூட சிலுவையின் பாடுகளை அனுபவித்து துன்புறவேண்டும். இதனால் எதிர்காலத்தில் நல்ல கனிகளை தந்து தேவனுடைய மகிமையான அன்பை வெளிப்படையாக காண முடிகின்றது.

3. இந்த உலகத்தின் மனிதர் உங்களை துன்புறுத்தி நிந்தித்து பேசும்பொழுது நீங்கள் ஆச்சரியமும் கவலையும் கொள்ள வேண்டாம். இது உங்களுக்கு இளைப்பாறும் இடமல்ல. இது போர்க்களம். “எல்லா மனுஷரும் உங்களைக் குறித்து புகழ்ச்சியாய் பேசும்பொழுது உங்களுக்கு ஐயோ” (லூக்.6:26). இது நீங்கள் உலகத்தின் துணிவான பாவ வழிகளையும் பழக்கங்களையும் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நிரூபிக்கிறது. என்னுடைய பிள்ளைகளை புகழ்ந்து பேசுவது அவர்களது சுபாவத்துக்கும் குணத்துக்கும் எதிரானது. ஏனெனில் இருளும் ஒளியும் ஒன்றாக இணைந்து தீய மனிதர்கள் உங்களை துன்புறுத்துவதை தங்கள் சுபாவத்துக்கு எதிராக நிறுத்திக்கொள்ளும் பொழுது உங்களுக்கு தீங்கு நேரிடும் அவர்களுடைய தீய எண்ணங்கள் உங்கள் ஆத்தும வாழ்வை தடைசெய்யவும் வளர்சசியற்று போகவும் செய்யும்.

மேலும் உலகத்தின் மேலும் உலகத்தின் சுபாவ மனிதர் மேலும் நம்பிக்கை வைப்பது உங்கள் வீட்டை மணலின் மேல் கட்டுவது போன்றது. இன்று அவர்கள் உங்களை மேன்மையை தூக்கி நிறுத்துவர், பின்பு நாளைக்கு உங்களை தள்ளி விடுவார்கள். உங்கள் தடயமே இல்லாதபடி செய்வார்கள். ஏனெனில் அவர்கள் எதிலும் சென்றபொழுது அவர்கள் எல்லாம் ஒரே தொனியில் “ஓசன்னா, ஓசன்னா” (மத்.21:9) என சத்தமிட்டு

ஆர்ப்பரித்தனர். ஆனால் மூன்றே நாட்களுக்கு பிறகு நான் அவர்களுடைய பாவ வாழ்க்கையைப் பற்றியும் சுய நலத்தைத் தேடுதலைப் பற்றியும் கூறக் கேட்டபொழுது மாறி விட்டார்கள், "இவனை சிலுவையில் அறையும்! சிலுவையில் அறையும்!" என கூக்குரலிட்டனர் (லூக்.23:21).

4. சில நேரங்களில் ஏதாகிலும் தவறாக புரிந்து கொண்டதால் சில விசுவாசிகள் அல்லது எல்லாருமே உங்களுக்கு எதிராக எழும்பி உங்களை துன்பப்படுத்தினால் சோர்ந்துபோக வேண்டாம். மிகுந்த உண்மையுடனும் விசுவாசத்துடனும் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலால் உங்கள் கடமையை தொடர்ந்து நிறைவேற்றுங்கள். தேவன் தாமே தமது சேனைகளுடன் உங்கள் பக்கம் இருக்கிறார் என்பதை நினைவு கூருங்கள். சோர்ந்து போகாதிருங்கள். உங்களது நல்ல திட்டங்களும் நோக்கமும் உங்கள் சுயநலமற்ற அன்பும் உலகிற்கு வெளிப்படும். எல்லாரது முன்னிலும் உங்களது பணிகளுக்காக உண்மை ஊழியத்திற்காக கனமடைவீர்கள்.

நானும் மனிதரை மீட்பதற்காக எல்லாவற்றையும் எல்லா உரிமைகளையும் துறந்து வந்தேன். ஆனால் இறுதியில் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டேன். உலகம் உங்களை தள்ளி விடும்பொழுது ஆச்சரியப்படாதிருங்கள். அது ஆண்டவரையும் தள்ளிவிட்டது. இதனால் உங்கள் பிதாவின் உண்மையான குமாரனாக நீங்கள் இருப்பதை அறிவீர்கள்.

5. ஆடம்பரமாகவும் உலக காரியங்களில் எப்பொழுதும் வெற்றியுடனும் வாழ்பவர்கள் எல்லாம் தேவனை உண்மையாக தொழுதுகொள்பவர்கள் என நினைக்கவேண்டாம். அநேகமாக உண்மை இதற்கு எதிரிடையாக உள்ளது. சில ஆடுகள் மந்தையிலிருந்தும் மேய்ப்பனிடமிருந்தும் விலகி காட்டிற்குள் சென்று நல்ல மேய்ச்சலை காண்கின்றன. ஆனால் அவையாவும் காட்டு மிருகங்களால் தாக்கப்பட்டு துண்டுதுண்டாகி விழும் அபாயம் உண்டு. ஆனால் மந்தையிலும் மேய்ப்பருடனும் நிலைத்திருப்பவைகள் ஒருவேளை பலவீனமாகவும் வியாதியுடனும் காணப்படக்கூடும். ஆனால் அவை மேய்ப்பனுடைய பாதுகாப்பில் பத்திரமாக உள்ளன. இதுதான் விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம்.

6. ஒரு விசுவாசியின் வாழ்க்கையும், அவிசுவாசியின் வாழ்க்கையும் ஆரம்பத்தில் ஒரேமாதிரியாக காணப்படும். ஆனால் முடிவு வரும்பொழுது அவர்கள் ஒரு பாம்பும் பட்டுப்புழுவும் போல வித்தியாசமாக முடிவடைவார்கள்.

பாம்பு பலமுறை தனது தோலை உரித்து களைந்தும் பாம்பாகவே காணப்படும். ஆனால் பட்டுப்புழு கண்ணுக்குத் தெரியாத அதன் கூட்டை விட்டு வெளி வருகையில் புதியதொரு சிருஷ்டியாக அழகிய முழுபட்டுப் பூச்சாக பறந்து செல்கிறது, அது போலவே விசுவாசி தனது சரீரத்தை விட்டு ஆவிக்குரிய மகிமையில் பிரவேசித்து பறந்து பரலோகில் நித்தியமாக வாசம் பண்ணுவான். பாவியோ மரித்தபின்னும் பாவியாகவே இருக்கின்றான்.

பட்டுப்புழு அந்த கூட்டில் சிறு இடத்தில் நெருக்கப்பட்டு இருக்கும்பொழுது சோர்ந்தும் போராட்டத்துடனும் சிலுவையில் இருப்பதுபோல காணப்படுகிறது. இந்த இடர்பாடும் போராட்டமும் அதன் இறக்கை பலமடைந்து எதிர்கால வாழ்விற்காக நன்கு பொருந்த உதவுகின்றன. எனது பிள்ளைகள் சரீரத்தில் இருக்கும்பொழுது ஆவிக்குரியதான போராட்டத்தில் போராடி அதிலிருந்து விடுபட எதிர் நோக்கி பெருமூச்சுகளோடும் ஏக்கத்துடனும் இருக்கின்றனர். ஆனால் சிலுவையை சுமப்பதனால் நான் அவர்களை பலப்படுத்தி முற்றிலும் ஆயத்தமாகவும் நித்திய வாழ்விற்கு ஏற்றவர்களாக்குகிறேன் (ரோம.8:23).

இந்த ஆவிக்குரிய போரின் மத்தியிலே அவர்கள் சிலுவை சுமந்து கொண்டிருக்கும்பொழுது நான் அவர்களுக்கு உண்மையிலேயே அற்புதமான சமாதானத்தை இதயத்தில் தருகிறேன், அவர்களுடைய துணிவு குறையாதபடி இருக்கும். எடுத்துக்காட்டாக, என்னுடைய ஒரு உண்மையுள்ள இரத்தசாட்சி வார்த்தையிலும் செய்கையிலும் வல்லவனாக சாட்சி கூறினான். அவனுடைய பகைவர் அவனை பிடித்துச் சென்று ஒரு மரத்தில் தலைகீழாக கட்டி தொங்க விட்டனர். அவனுக்கு அதிக வலி இருந்தபொழுதும் அவமானப் படுத்தப்பட்டபோதும் தன்னை துன்புறுத்தியவர்களை பார்த்து, "நீங்கள் என்னை இவ்வாறு நடத்துவது எனக்கு துன்பத்தையோ சோர்வையோ தரவில்லை. எல்லாமே தலைகீழாக இருக்கும் இந்த உலகத்தில் நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. இங்கே யாரும் எதையும் நேராக பார்ப்பதில்லை. உங்கள் சுபாவத்தின்படியே எனக்கு இப்படி செய்தீர்கள். ஆனால் நீங்கள் என்னை தலைகீழாக கட்டி விட்டதாக நினைக்கின்றீர்கள். ஆனால் உண்மையில் நான் நேராக இருக்கிறேன். நிழற்பட கருவியில் வைத்துக் காட்டப்படும் கண்ணாடி வில்லையை தலைகீழாக வைக்கப்படும்பொழுதுதான் அதன் படம் சரியாக காட்டப்படுகிறது. இப்பொழுது உலகத்தின் கண்களுக்கு நான் தலைகீழாக

இருக்கலாம். ஆனால் தேவனுக்கும் பரம தேசத்தினருக்கும் நான் நேராக காணப்படுகிறேன். அவரது சிலுவைக்காக அவரை துதிக்கிறேன்" எனக் கூறினான்.

8. விசுவாசிகளுக்கு சில வேளைகளில் எனக்காக இரத்தசாட்சியாக மரிப்பது எளிதானதாகவும் இருக்கலாம். ஆனால் எனக்கு அனுதின வாழ்வில் ஒவ்வொருநாளும் தங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து மற்றவர்களுடைய (1 கொரி.15:31) இரட்சிப்புக்காக பாடுபடும் சாட்சிகளும் தேவை, மரணம் எளிதானது, ஆனால் சாட்சியாக தினமும் வாழ்வது கடினமானது. ஒரு விசுவாசியின் வாழ்க்கை அனுதினமும் சாவது. ஆனால் எனக்காக தங்கள் வாழ்வை அளித்திட முன்வரும் ஒவ்வொருவரும் நித்தியத்தில் முழுமையான மகிழ்ச்சியை பெறுவார்கள்.

வேதனையும் பாடுகளும் துன்பமும் துயரமும் மேகங்களைப் போல எழும்பி நீதியின் சூரியனை மறைத்து அவரை நீங்கள் காணக்கூடாமல் செய்யும்பொழுது மனமடிந்த போகவேண்டாம். முடிவில் இந்த துன்பமாகிய மேகம் ஆசீர்வாதத்தின் மழையாக உங்கள் மேல் பொழியும். நீதியின் சூரியன் உங்கள்மேல் உதிக்கும். அது மறையவே போவதில்லை (யோவா.16:20–22).

# 6

# பரலோகமும் நரகமும்

## பகுதி 1

**சீடன்:** ஆண்டவரே, பரலோகம் மற்றும் நரகம் என்பது என்ன? அவை எங்கே இருக்கின்றன?

**ஆண்டவர்:** பரலோகமும் நரகமும் ஆவிக்குரிய ஆட்சியினுடைய எதிருக்கெதிரான இரண்டு எல்லைகள். அவற்றின் ஆரம்பம் மனிதனுடைய இதயத்தில்தான், இந்த உலகத்தில்தான் அதன் அஸ்திபாரங்கள் இடப்படுகின்றன. மனிதன் தனது ஆவியை பார்க்க இயலாதது போல அவனால் ஆத்துமாவின் இந்த இரு நிலைகளையும் பார்க்க முடியாது. ஆனால் அவனுக்குள் இதன் அனுபவங்கள் ஏற்படுகின்றன. தன்மேல் அடி விழும்பொழுது அதன் வலியை உணருகிறான். இனிப்பான சுவையை மிட்டாய்களை உண்ணும்பொழுது உணருகின்றான். அந்த அடிப்பட்டதால் ஏற்பட்ட காயம் அதிகமான வலிதந்து இறுதியில் மரணத்தை அழிவை தந்து விடுகிறது. ஆனால் மிட்டாயை உண்ணும்பொழுது அது செரிப்பதனால் பலன் கிட்டுகிறது. அதைப்போலவே பாவச்செயல் ஒன்றின் வலியும், நற்செயல் ஒன்றின் மகிழ்வும் சிலவேளைகளில் உடனே காணப்படும். ஆனால் முழு தண்டனையும், அல்லது வெகுமதியும் அந்த ஆவிக்குரிய ஆட்சி எல்லைக்குள் பிரவேசித்து பின்புதான் கிட்டும்.

2. இந்த உலகில் மனிதன் ஒன்றிலும் நெடுநாட்களுக்கு திருப்தியாக இருப்பதில்லை. தனது சூழ்நிலைகளிலும் சுற்றுப்புறங்களிலும் மாற்றத்தை தேடிக்கொண்டே இருப்பான். இது தெளிவாக இந்த மாறி மறைந்து ஓடிவிடும் உலகப் பொருட்களால் அவனை திருப்தி செய்ய இயலாது என காட்டுகிறது. அவன் அசையாததும் மாறாததும் தனது சுவைக்கும் விருப்பத்துக்கும் ஏற்றதுமான ஒன்றை நாடுகிறான். அவன் இப்படி தேடும்பொழுது இந்த உண்மையை என்னிடத்தில் கண்டு பிடித்துவிட்டால் அவனது எல்லா

விருப்பங்களும் முற்றுபெறும். ஏனெனில் பூரணமான ஐக்கியமும் முழுமையான மகிழ்வும்தான் சரீரம், ஆவி ஆகியவற்றின் தேவையாக உள்ளது. உண்மையில், மனித ஆத்துமாவின் நோக்கம் மெய் சமாதானத்தை பெற்றுக்கொள்ளுதல்தான். சில நேரங்களில் மனிதனின் இருதயத்தில் அவனுடைய சுய எண்ணமின்றி திடீரென மகிழ்ச்சி அல்லது துக்கத்தின் உணர்வு ஏற்படுகின்றது. அவனுடைய ஆவிக்குரிய பழக்கத்தின்படி இவற்றில் ஒன்றினை அவன் தெரிந்தெடுக்கிறான். இவ்விதமாக பரலோகம் அல்லது நரகத்தின் அஸ்திபாரம் மனிதனுடைய இருதயத்தில் உருவாகிறது. மரித்தபின் இந்த உலகின் வாழ்வில் அவனுக்கிருந்த விருப்பங்கள் வாஞ்சைகள் அவனை ஆயத்தமாக்கின நிலைமைக்கு அவன் பிரவேசிப்பான்.

3. சிலர் ஆசைதான் எல்லா வேதனைக்கும் துயரத்துக்கும் வேராக உள்ளது. அதனால் பரலோக ஆனந்தத்தையும் தேவனுடைய ஐக்கியத்தையும் கூட ஆசைபடுதல் தவறு. இரட்சிப்பு என்பது எல்லா ஆசைகளையும் அழிப்பதுதான் என கூறுகின்றனர். இது மிகப்பெரிய தவறு. தாகமுள்ள மனிதனுக்கு தண்ணீர் தராமல் அந்த தாகத்தை அழித்து கொன்று போடவேண்டும் என்பது தவறு. தாகம் அல்லது விருப்பம் என்பது வாழ்வின் ஒரு பகுதி. அதனை நிறைவேற்றாமல் அழித்து விடுவது இரட்சிப்பு அல்ல. தாகம் தீர தண்ணீர் வேண்டும், தண்ணீர் தாகத்தை தீர்ப்பதற்காகவே உள்ளது. அதைப்போலவே ஆத்துமாவின் விருப்பம் உண்மையான ஆனந்தமும் சமாதானமும் இருப்பதை காட்டுகிறது. தன்னில் அந்த வாஞ்சையை உருவாக்கின தேவனை ஆத்துமா கண்டடையும்பொழுது மகிமையான திருப்தியை அடைகிறான். இது தாகமுள்ள மனிதன் தண்ணீரால் அடைவதைவிட பெரியது. இந்த ஆத்தும வாஞ்சையின் திருப்தியைத்தான் நாம் 'பரலோகம்' என்று அழைக்கிறோம்.

4. சமுத்தரத்து தண்ணீர்கள் நடுவில் ஒரு மனிதன் இருந்தாலும் தாகத்தால் மரிப்பதுண்டு. கடல் நீர் தாகத்தை தணிப்பதில்லை. அன்பின் கடல் மத்தியில் வாழ்ந்தாலும் தேவனுடைய கிருபையை தங்கள் கீழ்ப்படியாமையினாலும், பாவத்தினாலும் அடையாமல் போனதால் தாகத்தில் மரிக்கின்றனர். ஆனால் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி என்னண்டையில் வருபவர்களுக்கு ஜீவதண்ணீர் கிட்டுகிறது. அவருக்குள் அன்பும் சமாதானமும் திருப்தியளித்தலும் உண்டு. இதனையும் நாம்

பரலோகம் என்கிறோம்.

5. அநேகர் இந்த உலகின்மேல் அன்பும் வாஞ்சையும் கொண்டு வாழ்கின்றனர். எனது பிள்ளைகளுடைய மாதிரியாலும் போதனையாலும் சில சமயங்களில் அவர்கள் இதயம் பரலோகத்தை நாடி மேல் சென்றாலும் புவி ஈர்ப்பு விசைபோன்று மேலே செல்லும் கற்களை கீழே இழுப்பது போன்ற விசையால் இழுக்கப்பட்டு இந்த உலகில் விழுந்து முடிவில் நரகத்தில் செல்கின்றனர். ஆனால் உண்மையாக என்னிடத்தில் மனந்திரும்பும் மனிதனுக்கு அவனது இதயத்திலுள்ள ஆலயத்தை அன்பின் அடிகளால் சுத்திகரித்து ராஜாதி ராஜா வாழும் பரம சாவஸ்தலமாக்குகிறேன். இந்த உலகிலுள்ள இராஜாக்களுடைய மகிமையும் ஆடம்பரமும் இன்று காணப்படுகிறது. நாளை மண்ணோடு கலந்துவிடுகிறது. ஆனால் தேவனுடைய இராஜ்ஜியத்தின் குமாரர் மகிமையையும் மேன்மையையும் இராஜ்யத்தையும் கிரீடங்களையும் அடைவார்கள் அந்த பரலோகத்திற்கு முடிவே இல்லை.

6. பாவிகள் தங்கள் சந்தோஷங்களை அதிகரிக்க மற்றவர்களிடமுள்ள நல்ல பொருட்களை திருடுகின்றனர். அதனால்தான் மனிதர்கள் வெளிநாடு செல்லும்பொழுது தங்கள் வீட்டை பூட்டி வைத்துவிட்டு செல்கின்றனர். இந்த பொருட்களை பூட்டிவைத்தல் தொடர்ந்து எதிராக இதயம் அடைத்து பூட்டப்பட்டுள்ளது. தங்கள் தேவனுக்கும் உருவாக்கினவருக்கும் அடைத்து பூட்டப்பட்டுள்ளது. ஆனால் இருதயத்தின் பூட்டு, அந்த கதவண்டையில் நின்று தட்டுபவருக்கு திறக்கப்படுமானால் (வெளி 3:20) இருதயத்தின் விருப்பங்களும் ஏக்கங்களும் நிறைவு பெற்றுவிடும். அப்பொழுது வீடுகளின் கதவுகள் பூட்டப்பட வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் மற்றவர்களுடைய பொருட்களை திருடுவதற்கு பதிலாக தீமைசெய்வதற்கு பதிலாக எல்லாரும் அன்பினால் ஒருவருக்கொருவர் சேவை செய்வார்கள். தேவனுக்கு தரப்படவேண்டியதை மனிதர்கள் தந்துவிடும்பொழுது அவர்கள் நன்மையை மட்டுமே தேடுவார்கள். இவ்விதமாக அவர்கள் அற்புதமான ஆனந்தத்திலும் சமாதானத்திலும் பிரவேசிப்பார்கள். இதுவே பரலோகம்.

7. பாவிகளை நரகத்திலிருந்து மீட்டு அவர்களை பரலோகத்திற்கு நடத்திச்செல்ல நான் சிலுவையில் மரித்தபொழுது இரண்டு கள்ளர்கள் எனது இரண்டு பக்கங்களிலும் மரித்தனர். பார்க்கும்பொழுது நாங்கள் மூவரும் ஒரேவிதமாக பாடுபட்டதுபோல தோன்றினாலும் ஆவிக்குரிய

கண்ணோட்டத்தில் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. ஒருவன் தனது இருதயத்தை எனக்கு விரோதமாக அடைத்துக்கொண்டு மனம் திரும்பாமல் மரணத்தை சந்தித்தான். ஆனால் மற்றவன் உண்மையான மனந்திரும்புதலுடன் தன் இருதயத்தை எனக்கு திறந்து எனது ஐக்கியத்தில் ஜீவனைப்பெற்று அன்றே என்னுடன் பரலோகில் பிரவேசித்தான் (லூக்.23:39–43). இந்த பரதீசு கல்லறைக்கு அப்புறமல்ல, இப்பொழுதே, மனிதனுடைய இதயத்தில் ஆரம்பமாகிறது. அது இவ்வுலகத்தின் கண்களுக்கு மறைவாக உள்ளது (லூக்.17:21). உண்மையான இரத்தசாட்சி ஒருவன் தனது மரணதருவாயில் இருந்தான். அவனை பிடித்து துன்புறுத்தியவர்களால் மிகவும் கொடுமையான அடிகளையும் பாடுகளையும் சகித்தான். ஆனால் இறுதியில் பரலோகத்தின் சந்தோஷத்தால் நிறைந்து அவாக்ளைப் பார்த்து "என் இருதயத்தை திறந்து எவ்வளவு அற்புதமான சமாதானம் இப்பொழுது எனக்கு இருக்கிறது என காட்டக்கூடுமானால் நலமாக இருக்கும், இந்த உலகம் அதனை கொடுக்கவும் எடுத்துக்கொள்ளவும் கூடாது! அப்பொழுது நீங்கள் இதன் சத்தியத்தை அறிந்து கொள்வீர்கள். ஆனால் அது யாரும் பார்க்கக்கூடாத மறைவான மன்னா போலிருக்கின்றது" எனக் கூறினான். அவன் மரித்த பின்பு அந்த அறிவற்ற மக்கள், அவன் இருதயத்தை வெட்டி திறந்து அதற்குள் ஏதாகிலும் விலையேறப்பெற்ற பொருள் இருக்குமா என பார்த்தனர். அனால் அவர்கள் ஒன்றையும் காணவில்லை. பரலோகத்தைப்பற்றிய உண்மை அதனை ஏற்றுக்கொண்டு தங்கள் மகிழ்ச்சியாக கருதுபவர்களுக்கே வெளிப்படுத்தப்படும்.

8. சில மாதங்கள் மனிதனாய் உருவாவதற்காக நான் தங்கியிருந்த மரியாளின் கர்ப்பத்தைவிட ஒரு விசுவாசியின் இருதயம் மிகவும் ஆசீர்வாதமானது, அதை நான் எனது வீடாக்கி தங்குவேன். அதனை பரலோகமாக்கிடுவேன்.

9. அநேகர் பரலோகத்தை தேடியும் தங்கள் அறியாமையினால் அதனை இழந்துவிடுகிறார்கள். ஒரு ஏழை பிச்சைக்காரன் இருப்பத்தோரு வருடங்களாக ஒரு இடத்தில் உட்கார்ந்திருந்தான். செல்வந்தன் ஆகவேண்டும் என்ற ஆசையால் தனக்கு கிடைத்த பணத்தையெல்லாம் சேர்த்து வைத்தான். அவன் உட்கார்ந்திருந்த இடத்திற்கு கீழே அதிபொக்கிஷங்கள் நிறைந்த அறை ஒன்று மறைவாக இருந்தது. அங்கே

அத்தனை ஆண்டுகள் இருந்தும் அவன் அதை அறியவில்லை. அவன் மிகுந்த ஏழ்மையாக மரித்துவிட்டபொழுது அவன் அங்கே மிகுந்த ஆண்டுகளாக உட்கார்ந்திருந்ததால் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அங்குள்ள அதிபதி அந்த இடத்தை தோண்டி பார்க்க உத்தரவிட்டான். அங்கே மண்ணை தோண்டியபொழுது மிக விலையுயர்ந்த பொருட்களை கண்டுபிடித்து ராஜாவின் கஜானாவுக்கு எடுத்து சென்றனர். "நீ அந்த வார்த்தையின்படியே செய்யும் பொருட்டு அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது" (உபா.30:14).

10. ஆவிக்குரிய வாழ்வைப்பற்றி அறியாதவர்கள் துயரத்தால் நிறைந்த இந்த உலகில் உண்மையான சமாதானத்தையும் பரம சந்தோஷத்தையும் அனுபவிக்க இயலாது எனக் கூறுகின்றனர். ஆனால் துருவ பிராந்தியத்தின் பனிக்கட்டியான பகுதிகளில் சூடான தண்ணீர் ஓடும் அருவிகள் ஓடுகின்றன. அதைப்போலவே ஆவிக்குரிய வாழ்வை அறிந்தவர்கள் துன்பம் நிறைந்த இந்த உலகில் விசுவாசிகளின் இதயத்தில் பரம சமாதானத்தின் நீரோடைகள் பாய்வதை அறிவார்கள். ஏனெனில் அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் மறைவான அக்கினியாக பிரகாசிக்கிறார்.

11. தேவன் எல்லா மனிதர்களுடைய இரத்தமும் ஒன்று போலாக தம் சாயலில் இருக்கும்படி சிருஷ்டித்திருந்தாலும் அவர்கள் குணநலன், மனநிலை, பலம் ஆகியவை வித்தியாசமானதாக இருக்கும்படி படைத்துள்ளார். ஒருவேளை இந்த உலகின் எல்லா மலர்களும் ஒரே நிறமாகவும் மணமாகவும் இருந்தால் அவ்வளவு அழகாக இராது. பல நிறம் தீட்டப்பட்டுள்ள கண்ணாடி வழியே சூரிய ஒளிக்கதிர்கள் பிரகாசிக்கும் பொழுது விதவிதமான அழகை வெளிப்படுத்துகிறது. அதைப்போன்றே நீதியின் சூரியன், இவ்வுலகிலும் பரலோகத்திலும் விசுவாசிகள், பரிசுத்தவான்கள் மூலமாக தனது அளவற்ற மகிமையையும் வெளிப்படுத்துகிறார். இவ்வாறு நான் அவர்களிலும் அவர்கள் என்னிலும் நிலைத்திருக்கும் பொழுது அவர்கள் மிகுந்த ஆனந்தத்தை பெறுவார்கள்.

## பகுதி 2

**சீடன்:** ஆண்டவரே, இளைப்பாறுதலும் ஆனந்தமும் அனுபவிப்பதால்

விசுவாசிகள் நினைப்பது அவர்கள் சொந்த எண்ணங்களும் கருத்துக்களும்தான் என சிலர் கூறுகிறார்கள். இது உண்மையா?

**ஆண்டவர்:** விசுவாசிகளின் மனதில் உள்ள இளைப்பாறுதலும் நிலையான சமாதானமும் எனது சமூகம் அவர்களுக்குள் இருப்பதால்தான். பரிசுத்த ஆவியானவரின் உயிர்தரும் தாக்கம் அவர்களுக்குள் இருப்பதால் அவர்கள் நிலையான சமாதானத்தை அனுபவிப்பார்கள். ஆவிக்குரிய மகிழ்ச்சி இருதயத்தின் யோசனைகளால் வருகின்றது என கூறுபவர்கள் பிறவியிலேயே கண்பார்வை அற்றவனாக இருந்த அறிவற்ற ஒரு மனிதனைப் போன்றவர்கள். குளிர்காலத்தில் அவன் வெப்ப சூழலுக்காக வெளியே அமர்ந்திருந்தான். சூரியனுடைய வெப்பத்தைப் பற்றி என்ன நினைக்கிறான் என்று சிலர் அவனை கேட்டபொழுது அவன்'' 'சூரியன்' என்ற ஒன்று இல்லவே இல்லை. நான் இப்பொழுது வெளியே உணருகிற வெப்பம் எனது உடலுக்குள் இருந்து வருகின்றது'' எறும் கூறினான், மேலும் "ஒரு பெரிய அக்கினி பந்து'' போல ஒன்று வானில் தொங்குகிறது என்பதை மக்கள் கூறுவது ஏற்றுக்கொள்ள இயலாது'' என்றான். "லௌகீக ஞானத்தினாலும் மாயமான தந்திரத்தி னாலும் ஒருவனும் உங்களை கொள்ளைக்கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்'' (கொலோ.2:8).

2. உண்மையான மகிழ்ச்சி மனிதனுடைய சிந்தனைகளால் வரும் என்றால் இந்த உலகின் தத்துவ ஞானிகளும் ஆழமாக சிந்திப்பவர்களும் பொங்கி வழிகிற மகிழ்ச்சி அனுபவத்துடன் இருந்திருக்கவேண்டும். ஆனால் என்னை விசுவாசித்த ஒரு சிலர் தவிர இவ்வுலகில் தத்துவ ஞானிகளாக கருதப்பட்டவர்களும் சந்தோஷமே அற்றவர்களாக இருந்தார்கள். உடனே மறைந்து போகிற களிப்பை சில விதிகளை தாங்கள் கைக்கொள்வதில் கண்டார்கள்.

பரிசுத்த ஆவியானவரை பெற்று நிறைவுகொள்வதால் மட்டுமே மனிதன் பரம ஆனந்த வாழ்வை அடையும்படியாக நான் அவனை சிருஷ்டித்துள்ளேன். நிலக்கரிக்குள் தீயை பெற்று எரியும் இயற்கை தன்மை உள்ளது. ஆனால் பிராண வாயு இன்றி தீ அதனை பற்றாது. அதைப்போன்றே பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனுக்குள் பிரவேசிக்கவில்லையென்றால், அவன் இருளில் இருப்பான். உண்மை மகிழ்வையும் சமாதானத்தையும் கண்டடைய மாட்டான் (யோவா.3:8).

3. மனிதனுடைய இதயம் சரியான ஒழுங்கின்படி இருப்பது, கிட்டார் அல்லது வயலின் வாத்தியக் கருவிகளுடைய கம்பிகள் இறுக்க இசைவாய்க் கட்டப்பட்டு இருப்பதை போன்றது. அவற்றை மீட்டுகையில் இனிய சங்கீதம் இசைக்கப்படும். அவை அப்படி இறுக்கமாக இல்லையென்றால் அவலமான ஒலிகள் கேட்கும். ஒழுங்காக கட்டப்பட்டிருந்தால்தான் அந்த இசை காற்றில் எழும்பி செவியில் கேட்கும். அதேபோன்று மனிதனின் சிந்தனையையும் கற்பனைகளையும் பரிசுத்த ஆவியானவரின் உயிரூட்டும் சுவாசத்தின் முன் ஒரு முகப்படுத்துவது பரலோகிலும் மகிழ்வின் கீதங்கள் எழும்பும்.

**சீடன்:** ஆண்டவரே, சில வேளைகளில் என்னுடைய சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் இழந்ததுபோல உணருகின்றேன். இது எனது மறைவான பாவம் ஒன்றினாலா அல்லது நான் அறியாத காரணம் எதுவும் உண்டா?

**ஆண்டவர்:** இது சில வேளைகளில் கீழ்ப்படியாமையினால் உண்டாகும். ஆனால் நான் சிலமுறை எனது பிள்ளைகளை சிறிதுநேரம் தனியே விட்டுச் செல்வதுபோல தோன்றும். அப்பொழுது அவர்கள் தனிமையையும் இளைப்பாறுதல் இல்லாமையையும் உணருவதுண்டு. அப்பொழுது நான் அவர்களுடைய உள்ளான சுயத்தையும் அவர்களுடைய பலவீனத்தையும் உணர்த்தி காட்டி என்னையல்லாமல் அவர்கள் வெறும் உலர்ந்த எலும்புகள்தான் என அறியச் செய்கிறேன் (எசே.37:1–14). அவர்கள் எப்பொழுதும் சமாதானத்தை அனுபவித்து தங்களை கடவுளுக்கு ஒப்பாக கருதி, பெருமையடைந்து நரக ஆக்கினைக்குள் விழாமலிருக்க அது தேவை (1 தீமோ.3:6). யூதா 6; ஏசா.14:12–17). இவ்விதமாக அவர்கள் பயிற்சி கொடுக்கப்படுவார்கள். அவர்கள் தாழ்மையாக எளிமையானவர்களாக என்னில் நிலைத்திருக்கும்பொழுது பரலோகின் நித்திய மகிழ்ச்சியை அனுபவிப்பார்கள்.

2. சில வேளைகளில் எனது பிள்ளைகள் பரிசுத்த ஆவியானவரின் நிறைவை அனுபவிக்கும்பொழுது தெய்வீக ஆனந்தத்தால் பொங்கி வழிந்து அந்த மகிமையையும் ஆசீர்வாதத்தையும் தாங்க இயலாமல் தன்னை மறந்த நிலையில் இருப்பதுண்டு. ஏனெனில் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை சுதந்தரிப்பதில்லை. மனிதர் முற்றிலும் உலகத்தின் பிடியிலிருந்து விடுபட்டு மகிமையில் பின்பு உயர்த்தப்படுபவர் (1 கொா.15:20; ரோம.8:19–22). அப்பொழுது பரலோகில் என் சித்தம் செய்யப்படுவதுபோல பூமியிலும் எல்லா சிருஷ்டியிலும் என் சித்தம்

செய்யப்படும். அப்பொழுது வலியும் வேதனையும் துயரமும் பெருமூச்சும், ஆபத்தும் மரணமும் மறைந்து நீங்கிவிடும். என் பிள்ளைகள் அனைவரும் என் பிதாவின் இராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள். பரிசுத்த ஆவியானவரின் ஆனந்தத்துடன் அவர்கள் என்றென்றைக்கும் அரசாளுவார்கள் (ரோம.14:17; வெளி 21:4, 22:5).

# ஒரு ஜெபம்

அன்பின் ஆண்டவரே, உமது அநேக விதமான ஆசீர்வாதங்களும் வரங்களும் எனது இருதயத்தை நிறைத்து நன்றியாலும் துதியாலும் பொங்கி வழிச் செய்கின்றன. ஆனால் இதயத்தினாலும் நாவினாலும் மட்டும் உம்மை துதித்தால் போதுமானதாகாது. நான் செயலாலும் என் வாழ்வாலும் உமது ஊழியத்திற்கு அர்ப்பணிக்கிறேன். எந்த தகுதியுமற்ற என்னை மரணத்திலிருந்து விடுவித்து ஜீவனுக்குள் கொண்டுவந்து உமது ஐக்கியத்திலும் அன்பிலும் சேர்த்ததற்காக துதிக்கிறேன். எனக்கு என்ன தேவை என்பதையும் நான் அறியேன். அருமையான தந்தையே, நீர் உமது சிருஷ்டிகளையும் அவற்றின் தேவைகளையும் அறிந்திருக்கிறீர். நீர் நேசிப்பதுபோல யாரும் நேசிக்க முடியாது. எனக்கு ஒரு இதயத்தை தந்தீர். அது உம்மில் மட்டும் உம்மை மட்டும் நோக்கியிருக்க உதவிசெய்யும். நீர் அதை உருவாக்கினீர்.

ஆண்டவரே, உமது பாதப்படியில் அமர்ந்திருப்பது உலகின் மிகப்பெரிய அரியணையில் அமருவதைப் பார்க்கிலும் உயர்ந்தது. உம் பாதப்படியண்டையில் அமர்ந்திருப்பது நித்திய இராஜ்யத்தில் சிங்காசனத்தில் இருப்பது போன்றது. இப்பொழுது உமது பரிசுத்த பாதப்படியாகிய பலிபீடத்தண்டையில் என்னை ஜீவபலியாக எரிய ஒப்புக்கொடுக்கிறேன். கிருபையுடன் என்னை ஏற்றுக்கொள்ளும். எங்கேயானாலும் எவ்விதத்திலும் உமது ஊழியத்தில் என்னை பயன்படுத்தும். நீர் என்னுடையவர், நான் உம்முடையவன். நீர் உமது கரத்தில் இந்த மண்ணை எடுத்து உமது சொந்த சாயலாக உருவாக்கி உமது குமாரனாக ஆகும் உரிமையை தந்தீர்.

எல்லா கனமும் மகிமையும் துதியும் நன்றிகளும் உமக்கே என்றென்றும் உரித்தானவை. ஆமென்.

* * *

1732



சுந்தர்சிங் தன்னுடைய பதினைந்தாவது வயதில் கிறிஸ்துவை தரிசனத்தில் கண்டு அவரை ஏற்றுக்கொண்டு, மனந்திரும்பி தனது பூர்வீக இந்து சமயத்திலிருந்து கிறிஸ்தவ மார்க்கத்திற்கு வந்தார். அவர் மனந்திரும்பிய பின் ஒரு சாதுவாக வேறுவிதமாகச் சொன்னால் ஒரு புனிதராக மாறினார். அடுத்த 25 ஆண்டுகள் தன்னுடைய மரணம் வரை சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். “இயேசுவின் பாதபடியில்” என்ற இச்சிறு நூல் சாது சுந்தர்சிங் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட தரிசனங்களின் தொகுப்பேயாகும். அவைகள் ஒரு சீடனுக்கும் (சுந்தர்சிங்) ஒரு குருவுக்கும் (தேவனுக்கும்) நடந்த ஒரு உரையாடல்போல் அமைந்துள்ளது. அத்தரிசனங்கள் மூலமாக அவருக்கு வெளிப்படுத்தப்பட்ட மேன்மையான அப்பழுக்கற்ற தேவனுடைய உபதேசங்கள் அடங்கியுள்ளன. அவைகள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் கிறிஸ்தவ மார்க்கத்தின் நடைமுறை போதனைகளாகிய பாவம், இரட்சிப்பு, ஜெபம், தேவ ஊழியங்கள் போன்றவைகள் அடங்கியுள்ளன. உண்மையிலேயே இவைகள் மிகுந்த ஆர்வமூட்டுபவைகளாக உள்ளன. “இயேசுவின் பாதபடியில்” சாதுசுந்தர்சிங்கின் ஆழமான அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பைக் காணமுடிகிறது. இதே அர்ப்பணிப்பை இதை வாசிக்கிற வாசகர்களிலும் இதைப்போன்ற அர்ப்பணிப்பு ஏற்படுத்தபட வேண்டும்.

WORD OF CHRIST
WOC
Chennai, India

ISBN 93-82134-69-7
9 789382 134695